Registered at the G. P. O. as a Newspaper ★ [illegible] 15

ஈழநாடு

[illegible] Tamil [illegible]

[illegible] 7 விசுவாவசு வைகாசி 10 முஹர்ரம் பிறை 21 (23-5-65) ஞாயிற்றுக்கிழமை [illegible] 101

தினமும் பாவியுங்கள்

மில்க் வைற்
நீல சோப்
ஒரு கட்டியின் விலை சதம் =/20.

700 ஆசிரியர்கள் இடமாற்றம்

பம்பலப்பிட்டி, சனி

கடந்த பொதுத் தேர்தலில் வெவ்வேறு கட்சிகளின் சார்பில் தேர்தற்பிரசாரங்களில் ஈடுபட்டதற்காக நேற்றுவரை சுமார் 700 ஆசிரியர்கள் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

கல்விப்பகுதியில் வெளியான இச்செய்திபற்றிக் கூறப்படுவதாவது:-

மிகத் தொகையான ஆசிரியர்கள் தம்மை இடமாற்றஞ்செய்யும் கல்வியதிகாரிகளைக் கேட்டுள்ளார்கள்.

ஆசிரியர்களின் அரசியல் ஈடுபாடு சம்பந்தமாக இதுவரை 6,000 முறைப்பாடுகள் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் விவகாரங்களில் சட்டத்துக்கு மாறாக ஈடுபட்டதற்காக கடந்த இரு வாரங்களில் 19 ஆசிரியர்கள் வேலை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் நால்வர் வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

கல்வி அதிகாரி அறிக்கை

கல்வியதிகாரி வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறப்படுவதாவது:-

ஆசிரியர்கள் வாக்குச் சீட்டு எண்ணிக்கையாளர்களாகவும், ஏஜண்டுகளாகவும் கடமையாற்றியிருக்கின்றனர். இவர்களது இந்த விதமான குற்றங்கள் பற்றிப்பலதரப்பட்ட புகார்கள் கல்விக்கந்தோருக்கு ஆயிரக்கணக்கில் வந்து குவிந்துள்ளன. செய்யப்பட்ட புகார்கள் உண்மையெனில், இலங்கையின் நிர்வாக விதியின் 263-ம் பிரிவின் பிரகாரம் தண்டிக்கப்படுவர்.

பிரசாரஞ்செய்தல், வாக்குகள் சேர்த்தல் முதலியன பாரதூரமான குற்றங்களாகும். மேற்சபைக்காயினும், சனப்பிரதிநிதிகள் சபைக்காயினும் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு அரசாங்க உத்தியோகத்தர் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது குற்றமாகும். காட்டப்பெற்ற குற்றங்கள் புரிவோர் பதவியினின்றும் நீக்கப்படுவர்.

சமஷ்டி அரசு மூலம் பிரச்னைகளைத் தீர்க்கலாம்

சிங்களவரும் தமிழரும் சமமாக வாழ இதுவே ஏற்ற வழி

வட்டுக்கோட்டையில் மந்திரி திருச்செல்வம் பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

"இந்த நாட்டில் வாழும் சிங்களம் பேசும் மக்களும் தமிழ்பேசும் மக்களும் சமமாக வாழ்வதற்கு ஏற்ற அரசு சமஷ்டி அரசியலாகும் சமஷ்டி அரசியல் மூலம் இந்த நாட்டிலுள்ள சகல பிரச்னைகளையும் சுலபமாக தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை எனக்கு திடமாக உண்டு. நான் மந்திரிசபையில் சேர்ந்து கொண்டதற்கு இரண்டுகாரணங்கள் உண்டு. ஒன்று இந்த நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதும், மற்றது திரு. செல்வநாயகத்தின் ஆணைக்கு உட்பட்டு நடப்பதேயாகும்." இவ்வாறு ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் தமக்கு வட்டுக்கோட்டை ஊர்மன்றத்தினரால் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி விழாவுக்கு தலைமை தாங்கினார். விழா ஆரம்பமாவதற்கு முன்னர் மந்திரி ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். ஊர்மன்ற உபதலைவர் திரு. அ. மார்க்கண்டு வரவேற்புரை வாசித்தளித்தார்.

அமைச்சர் திரு. திருச்செல்வம் தொடர்ந்து பேசுகையில், தமிழ் பேசும் மக்களின் பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள இத்தருணத்தில் நாம்செய்ய வேண்டிய பணிகள் பற்பல

(10-ம் பக்கம் பார்க்க)

மக்கள் எதிர்ப்பு பலிநிறுத்தப்பட்டது

கோண்டாவில், சனி

கோண்டாவில் கிழக்கு தபால்கந்தோருக்கு அருகாமையிலிருக்கும் ஞானவைரவர் கோயிலில் இன்று நடைபெறவிருந்த வேள்விப்பலி பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக நடைபெறவில்லை.

வளர்த்த மிருகங்களை ஆலயத்தின் முன் பலியிடுதல் மிகவும் பாவமானதொரு காரியம் என மக்கள் ஆட்சேபம் தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து கோயிலில் பலியிடுவதற்காக ஆடுகளைக் கொண்டுவந்தவர்கள் அந்த ஆடுகளைவிற்று கோவிலுக்கு அந்தப் பணத்தைக் காணிக்கையாகச்செலுத்துவதெனத் தீர்மானித்தனர்.

இனி இக்கோவிலில் பலியிடும் வழக்கம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென மக்கள் முடிவுசெய்துள்ளார்கள்.

கம்பராமாயணத்துக்கு தனிச்சிறப்பு உண்டு

யாழ்ப்பாணம், சனி

"உலகின் எந்தவொரு இலக்கியத்துக்கோ காப்பியத்துக்கோ இல்லாத தனிச்சிறப்பு கம்பராமாயணத்துக்கே உண்டு. அதன் காரணம் யாதெனில் அந்நூல் ஓர் அன்பு நூல் என்பதாகும். இந்நூல் இன்பம் நிறைந்த தமிழ்நெறிக் காப்பியம் எனின் மிகையாகாது. இது அறம், பொருள் இன்பம், வீடு எனும் நுதலிப் பொருளைத் தரும் அரும் பெரும் அருள் நூலாகும். கம்பன் தனது உளக் கருத்தை தசரதன்-இராமன், இராமன்-குகன், இராமன்-அநுமன் போன்ற பாத்திரங்களால் அன்பின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டுகிறான். இப்படியே, அவன் தனது உள்ளத்தின் உண்மை உணர்வுகளை பாத்திரவாயிலாக வெளிக்காட்டி, "காப்பியத்துக்கொரு கம்பன்" என விளங்குகிறான்.

மேற்கண்டவாறு கொழும்புத்துறை ஆசிரியகல்லூரிக் கலைமன்றத்தின் விசேஷ கூட்டமொன்றில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய பண்டிதர் சோ. இளமுருகனார்

(10-ம் பக்கம் பார்க்க)

வவனியா அரசாங்க அதிபர் உறுதி

"இந்த சங்கம் ஒரு வருட காலமாக ஆழ்ந்த நித்திரை செய்துகொண்டு இருந்தது. ஆனால் இனி அவ்விதம் இருக்காது. என்னால் கூடிய அளவு உதவிசெய்து இவ்வருடம் முடிவடைவதற்கு முன் வவனியாக்கச்சேரியில் புதிய மாதிரி வாசிகசாலையும், புதிதாக இரு விளையாட்டுத்திடலும் கட்டுவதற்கு ஆகவேண்டிய உதவி செய்து தர முயற்சிப்பேன்."

இவ்வாறு அண்மையில் வவனியா கச்சேரியில் நடைபெற்ற கச்சேரி சேமநலச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய வவனியா அரசாங்க அதிபர் திரு. ஆர். எம். வி. சேனநாயக்கா தெரிவித்தார்.

திரு. கணேஷ் சங்கத்தின் நிதி நிலைமை மோசமாக உள்ளதால் உருப்படியான வேலைகள் ஒன்றும்செய்ய முடியவில்லை என்றும் ஆகையால் இச்சங்கத்தில் 66 அங்கத்தவர் இருந்தும் இப்படியான நிலையில் இருப்பது வெட்கப்பட வேண்டியதென்றும் தெரிவித்தார்.

நாடகம் ஒன்று நடத்துவதற்கு வவனியாக் கச்சேரி உதவிக்காரியாலய அதிகாரி ஆர். பேரம்பலத்தை தலைவராகக்கொண்டகுழு ஒன்று நியமிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ஆர். எம். வி. சேனநாயக்கா. உபதலைவர்கள்: திரு. ஆர். பேரம்பலம், திரு. கே. நல்லநாதன். காரியதரிசி: திரு. எஸ். கணேஷ். உபகாரியதரிசி: திரு. [illegible] பொருளாளர்: ரீ. யே. மந்தியூஸ்.

[illegible]

பம்பலப்பிட்டி, சனி

தாய்லந்து, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து அதிக அளவு அரிசியைப் பெறுவதற்கு வழிவகுக்கு முகமாக உணவுக்கமிஷனர் திரு. பி ஏ. சில்வா இம்மாதமுடிவுக்குள் மேற்படி நாடுகளுக்கு செல்லவிருக்கிறார்.

1955ம் வருடத்துக்கு முன்னிற்ந்த சலுகைகளை வழங்குக

கல்வி மந்திரிக்கு சிரேஷ்ட [illegible]

நீர்கொழும்பு, சனி

சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெற்ற மாணவ மாணவியர் 1955-ம் வருடம் வரை ஆசிரிய நியமனப் பதவிகள் பெற்று வந்தனரென்றும் ஆசிரிய தராதரப் பத்திரப்பரீட்சை எடுக்க அனுமதிக்கப்பட்டனரென்றும் ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களன்றி சிரேஷ்ட தராதரப் பதிரம் பெற்றவர்களும் அனுமதிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டனரென்றும் ஆனால் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் ஆசிரியர்களாகப் பதிவுசெய்யப்பட்டவர்கள் மட்டுமே அவ்வுரிமைகளைபெற ஏனைய மாணவர்கள் அவ்வுரிமைகளை இழந்தனரென்றும்இதனால்சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெற்ற மாணவர்கள் பெரும்கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள் என்றும் நீர்கொழும்பு தமிழ் சிரேஷ்ட மாணவர்கள் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் எடுத்துக் கூறியுள்ளது.

இவ்விதநிலையால்சிரேஷ்ட தராதரம் பெற்றோர் தொகை வரவர அதிகரிப்பதோடு அவர்கள் ஒன்றும் செய்வதற்கு வழியற்றவர்களாக இருக்கவேண்டியிருக்கிறதென்றும் இவ்விதக் கஷ்ட நிலையைப் போக்கு முகமாக 1955-ம் வருடத்துக்கு முன் சிரேஷ்ட மாணவருக்கிருந்த சலுகைகளை வழங்குமாறு சங்கம் கல்வி மத்திரியைக் கேட்டுள்ளது.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்பரேஷன்
14 டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமது நூல் நிலையம்

மாவிட்டபுரத் திருத்தல வரலாறு

து குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் வெளியீடு: மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ க. து. ஷண்முகநாதக் குருக்களால் எழுதப்பெற்று சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தாரால் அழகாக அச்சிடப்பெற்று வெளிவந்திருக்கிறது. (விலை ரூ.2-50)

இதில் பிரம்மஸ்ரீ சு. துரைசுவாமிக் குருக்களின் ஆசியுரையும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களதும் அரசாங்க மொழித் திணைக்களத்து அத்தியட்சகர் திரு. கி. லக்குமணன் அவர்களதும் அணிந்துரைகளும் காணப்படுகின்றன.

ஈழநாட்டுக் கோவில்களைப் பற்றி, தனியாக வெளியிடப்பட்ட தல புராணத்துள் இது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. ஆனுல் இதனை ''வரலாறு'' என்று கூறுவது முழுவதும் பொருத்தமல்ல. கர்ணபரம்பரை, பாரம்பரியக்கதைகள் முதலியன புராணமாகும். வரலாறு என்பதுமிகவும் நுணுக்கமாக ஆராயப்பட வேண்டியது. இக்கோவிலைப்பற்றி வடமொழியில் உள்ள பல விடயங்கள் இந்நூலில் தமிழில் தரப்பட்டிருக்கின்றன.

(பக். 27-28)''சிங்கையாரியனும் புவனேகபாகுவும்'' என்னும் தலைப்பிட்டபகுதியில்கீரிமலையில்விருந்துஅளிக்கப்பட்டதற்கு நன்றியாகப் பாடப்பட்ட செய்யுள்கள் உள்ளன. அவை ''சம்புமால் குமாரயா அல்லது திரிசங்கபோதி புவனேகபாகுவால்'' பாடப்பட்டது என்று முதலியார் இராசநாயகம் கூறுவர். (யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 75) ஆனுல் யாழ்ப்பாண வைபவ வரலாற்றையே இந்நூலாசிரியர் சரியென ஒப்புக் கொள்ளுகின்ருர் போலும்

(பக். 29.) சபாபதி ஐயர் எவ்வாறு சுற்றுமதில்கள் பிரகாரங்கள், மண்டபங்கள் முதலியனஅமைத்தார்-யாரிடம் உதவி பெற்ருர் என்பது விளக்கப்படவேயில்லை.

குமாரசுவாமிக் குருக்கள், சபாபதிக்குருக்கள்வரலாறு- இக்கோவில் வரலாற்றில்- மிகவும் நீண்டதான, அதிமுக்கியத்தைப் பெறுகின்றது.

(பக். 42.) கருங்கற்றிருப்பணி செய்வித்த பெரியார்கள் பெயர்களைப் பற்றிய விபரங்கள் காணப்படவில்லை. இன்றைய் கோவில் இராஜ கோபுரம் அமைத்தவர் பெயர் அவசியம் மக்கள் அறியவேண்டிய ஒன்று.

பக்கம் 52-ல் மகாமண்டபம், நிருத்த மண்டபம் ஆதியன விரைவில் பூர்த்தியாகும் நிலையில் இருக்கின்றன. நிருத்த மண்டபத் திருப்பணியை மாவிட்டபுரம்-பளை வாசியான ஸ்ரீமான் ஆ. திருஞானசம்பந்தர் செய்து வருகிருர். இம்மண்டபம்மிகுந்த கவர்ச்சிகரமாக அமைகின்றது. இவ்வேலைகளைக் காரைக்குடி வாசியான பெரியசாமிஸ்தபதியின் மேற்பார்வையில் அவரது சிற்பக்கலைஞர் கோஷ்டியினர் இயற்றிவருகின்றனர். இப்படியாகக் கோவிலின் திருப்பணிகள் முறையாகவுஞ் சீராகவும் நடைபெற்று வருகின்றன'' என்று கூறப்பட்டிருக்கிறது. இதில், மகாமண்டபம் அமைப்பதற்கு உதவும்பெரியாரின் பெயர் காணவில்லை. அது யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதிச் சங்கஅதிபர் எஸ். கனகசபை அவர்கள் என்றே அறியக்கிடக்கிறது. இதையும் சேர்த்துக்கொள்வது வரலாற்றின் உண்மைக்கு உயர்வைக்கொடுக்கும்.

நிழல் படங்கள் இந்நூலுக்குக் கவர்ச்சி அளிக்கின்றன. மாவிட்டபுரக்கோவிலைப்பற்றிப்பாடிய நூல்களைப்பற்றிய குறிப்புக்களும், அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ள ஊஞ்சற் பாக்களும் போற்றற்குரியது. மாவிட்டபுர இடப் பெயர் ஆராய்ச்சியில் இந்நூலில் காட்டப்படும் கற்பனையான முடிவுகளைத் தவிர்த்திருந்தால் நன்று.

இக்கோவில் வரலாறு, பிற நாட்டில் இருந்து எங்கள் நாட்டுக்கு வரும் யாத்திரிகர்விரும்பிப்பெறக்கூடிய ஒரு வழிகாட்டி நூலாகும். இந்த விமர்சனத்தில் கூறப்படும் குறைகுற்றங்களை, மற்றைய பதிப்பில் திருத்தி அமைப்பாராகில், அவரே தமது முன்னுரையில் வரலாறுஎன்னஎன்றுகூறப்படும் இலக்கணத்திற்கு நிகராக உண்மையான வரலாற்றை வெளியிடும் கோவில் வரலாற்று ஆசிரியராக விளங்கலாம்,

—''சிகாமணி''

O

திருக்கோணேஸ்வரம்: ஆசிரியர்கள்: புலவர் வை. சோமாஸ்கந்தர், அ. ஸ்ரீஸ்கந்தராசா பி. ஏ., விலை: 1-75. வெளியிடுவோர்: பொ. கந்தையா ''தனசக்தி'' திருக்கோணமலை.

மறைந்து போகின்ற சைவத் தமிழ்க்கலைச் செல்வங்களைப் பேணி, கால ஓட்டத்தில் முன்னிறுத்தும் பணியில் ஈழநாட்டுப் பெரியார் பலர் முயன்று வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. பாடல்பெற்ற புனித தலங்களுள் ஒன்றுன திருக்கோணேஸ்வரத்தின் பூர்வீக வரலாற்றையும், தற்போதைய நிலையையும் எடுத்துக் கூறுவது இந்நூல்.

கர்ண பரம்பரையாகவும், கல்வெட்டுக்கள் வாயிலாகவும், புராணங்கள், சரித்திரங்கள் மூலமாகவும், தேவாரங்களாலும் தெரியவந்த கதைகளையும் செய்திகளையும் துணையாகக்கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் விளங்க நூலினை அமைத்ததுடன், கோணமா நகரின் அமைப்பையும் சமூகச் சிறப்பையும் அந்நகரில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் சீரிய மாண்பினையும் இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் வி. சுப்பிரமணியம் அவர்களும், சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களும் அணிந்துரைகள் வழங்கியுள்ளனர்.

இலக்கியம், வரலாறு, சமயம் எனப்படும் முப்பிரிவுகளாக வகுத்து ஆக்கப்பெற்றிருக்கும் இந்நூலில் திருக்கோணமலையின் பெயர்க்காரணமும், திருக்கோணேஸ்வரத்தின் ஆதி காலமும், போர்த்துக்கீசர் கால நிகழ்ச்சிகளும், கன்னியாய் வெந்நீரூற்றைப் பற்றிய விளக்கமும் சமூக வளர்ச்சி பற்றிய விளக்கங்களும், தல வரலாற்று மூலமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

—கை.

வரப்பெற்றோம்

ஞானதீபம்: அகிலபிராமண குரு சமூக சேவா சங்க மும்மாத வெளியீடு. 73, நாவலர் வீதி, வண்ணர் பண்ணை, யாழ்ப்பாணம்.

சைவசமயவினுவிடை: (இரண்டாம் புத்தகம்) அரசினர் பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டது, எழுதியவர்: பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா பிரதம ஆசிரியர், நாவலர் வித்தியாசாலை, வண்ணுர் பண்ணை.

அருளமுதம்: ஆத்மீக மாத வெளியீடு (விசுவாவசு புத்தாண்டு மலர்) ஆசிரியர்: முத்தமிழ்மணி சி. எஸ். எஸ். மணிபாகவதர். ''கந்தகோட்டம்'', 179, கோவில் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆசிரியன்: அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க வெளியீடு. தை, வைகாசி இதழ்கள்.

தமிழ் நேசன்: (இதழ்-8) ஆசிரியர்: ஏ. பி. ஏ. சாலி, 30, 32 பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

சிவபூசா விளக்கம்

ஆக்கியோன்: அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள். வெளியிட்டோர்: சிவானந்த குருகுலம்-திருக்கேதீச்சரம். பக்கம்: 260. சைவசமய நூல்களை ஆதாரமாகக்கொண்டு 5-வது குருகுல வெளியீடாக வெளிவந்திருக்கும் இந்நூலின் விலை குறிப்பிடப்படவில்லை.

இரசிக மஞ்சரி

செல்வி சிரோன்மணி நடனம்

குளிர்ந்த காற்ருய்
மாறட்டுமா உன்
கூந்தலில் நடனம்
ஆடட்டுமா?

என்று பாடி காதலன் ஒருவன் தன் ஆசைக்காதலியிடம் கொஞ்சிக்குலாவுவதாக தமிழ் சினிமாப்படம் ஒன்றில் ஒரு பாட்டுவருகிறது. காற்றில், கூந்தல் மட்டும் தானு நடனம் ஆடுகிறது? உலகிலுள்ள செடி கொடிகள் மரங்கள் விருட்சங்கள் அனைத்தையும் அவற்றின் ஒவ்வொரு கொம்பும் கிளையும் இலையும் பூவும் மொட்டும் காயுமாக அற்புதமாக ஆட்டிவைத்து நட்டுவாங்கம் செய்கிறது காற்று. அதுவும் எங்கள் ஊரில் சோழகக்காற்று எனப்படும் தென்றல்காற்று வீசஆரம்பித்து விட்டாலோ இந்த இயற்கையின் நடனத்தில் ஒரு புதுவிறுவிறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. எங்கு நோக்கினும் எதைப்பார்த்தாலும் எல்லாம் ஒரே அசைவும் ஆட்டமும், கூத்தும் நிருத்தமும், ஜதியும் வண்ணமுமாகவே காண்கின்றன. நம்மைச்சூழ்ந்துள்ள புவி அப்பொழுதெல்லாம் ஓர் அழகான நடன அரங்கமாக நமது கண்களுக்குத் தோன்றுகிறது. ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே? இறைவன் கூட ஆடிக்கொண்டேதானிருக்கிருனும். அதனுல்தான் பூமியும் அண்டகோளங்களுமே சொல்லிவைத்தாற் போல சுழன்ருடுகின்றன வாம்,

சென்றவாரம் வைகாசி விசாக பூரணை தினத்தன்று புஷ்ப தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு தூய நன்மணி மாடமென நிலவொளியில் மூழ்கிக்கிடந்த யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இரண்டரை மணி நேரத்துக்கு நல்லதொரு நாட்டியநிகழ்ச்சி நடைபெற்றது. யாழ்ப்பாணக்கல்லூரி மாணவி செல்வி சிரோன் மணி செல்லையா, தான் இந்தியா சென்று மேலும் கலைப் பயிற்சி பெறப்போவதை முன்னிட்டு, யாழ்ப்பாண இரசிகப் பெருமக்களிடம் நல்லாசி பெறும்நோக்கமாக இக்கலை விருந்தை அளித்தார். அவரது ஆனந்த பைரவி வர்ணம், இராக மாலிகை அபிநயங்கள் போன்றவை நகரமண்டபத்தில் அன்று குழுமியிருந்த இரசிகப் பெருமக்களின் பாராட்டுதலை வெகுவாகப் பெற்றன. இராகலட்சணங்களுக்கு வடிவம் அமைத்துக் கொடுத்ததுபோல ஓரோர் சமயங்களில் அவரது அபிநயத் தோற்றங்கள் லளித லாவண்யத்துடன் அழகாக அமைந்தன. பின்னணிபாடியவரும் வாத்தியக் கோஷ்டியினரும் சபையோரிடம் அன்று சபாஷ் வாங்கிவிட்டார்கள்.

இந் நிகழ்ச்சியின் போது பாராட்டுரை வழங்கிய கலையரசு திரு. சொர்ணலிங்கம் சிறு வயதில் நாட்டியம் கற்றுக் கொண்ட பெண்கள் பலர் அவர்கள் வாழ்க்கையில் நெருக்கடியும் சோதனையும் சூழ்ந்த சமயங்களில் தங்கள் மனத்திண்மையில் ஆடிப்போய்விடாமல் உறுதியாக நின்று வெற்றிபெற்றதை தாம் பலபேரிடம் அவதானித்திருப்பதாகக் கூறி, இக்கால மகளிரிடத்தே நாட்டியக்கலையில் பயிற்சி பெறவேண்டுமென்ற ஆர்வமும் விருப்பமும் அதிகரித்து வருவது தமக்கு மகிழ்ச்சிதருகிறதென்று குறிப்பிட்டார்.

''யாழ்ப்பாணத்திலே வஸந்தோற்சவகாலம் ஆரம்பமாகிவிட்டது. இனிமேல் ஆறு மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வளர்பிறைப் பட்சத்தோடு பல கோயில்களில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி இரவுபகலாக நடைபெறும். பொதுமன்றங்களிலும் சபா மேடைகளிலும் நடனம் ஆட முன்வரும் இக்கால நடனகலா வல்லியர் எங்களூர்க் கோவில் சந்நிதிகளில் தோன்றி இறைவனுக்கு நடனஞ்சலி செய்வதெப்போ?'' என்று வினவுகிருர் ஒரு திருவிழா உபயகாரர்.

சிந்திப்பதற்குரியது அவரது வினு.

''—அன்று...கன்னியராகி
நிலவினில்
ஆடிக்களித்தது
மிந்நாடே''
— பாரதி

— ''யாழ்தேவி''

ஃ ஃ ஃ

வாடியமலர்

(நாடகம்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்கசாலையிலிருந்து கோண்டாவிலுக்கு இடமாற்றம்பெற்றுச்சென்ற தலைமை ஆசிரியர் சுந்தரத்திற்களிக்கப்பட்ட பாராட்டு விழாவில் எஸ். சண்முக வடிவேலின் தயாரிப்பான 'வாடாமலர்' என்ற நாடகம் இடம்பெற்றது.

அட்வக்கேட்டுக்குப்படிக்க லண்டன் சென்ற சசிதேவன் அங்கு மிஸ் ஜோன்சன்என்ற ஆங்கில மாதைக் காதலித்துத்தாயகம் திரும்புகையில் அவளையும் அழைத்துவருகிருன். அவன் தந்தையோ அவளை, வந்த கப்பலிலேயே திருப்பியனுப்பிவிட்டுச் சாரதாவை அவனுக்கு மணம் முடித்துவைக்கிருர். அவன் அன்பு அவளுக்கு எட்டிக் காயாகிறது. அவள் காட்டும் அன்பும், பரிவும் அவனுக்கு நாராசமாகின்றன. தன் விவாகரத்திற்கு வாதாட அவனை அமர்த்த வந்த மிஸஸ் ஜேசுதாஸன் மூலம் தன் தவறை உணர்கிருன். சாரதாவிடம் மன்னிப்புக் கோர ஓடுகிருன். ஆனுல் அதற்குள்ளாக அந்த மலர் வாடிவிட்டது.

அட்வக்கேட் சசிதேவனுக தா. சண்முகநாதனும், மிஸஸ்ஜேசுதாஸனுக சி. சிவஞானசுந்தரமும், சாரதாவாக சி. ஆலாலசுந்தரமும் நடித்தனர். சாரதாவின்தந்தையாக க. குணசிங்கமும், சசிதேவனின் தந்தையாக சி. சந்திரசேகரமும் தோன்றினர்.

உள்ளத்தைத் தொடும் கதையாக இருந்தபொழுதிலும் நடிப்பு போதியளவு சோபிக்காததால் நாடகம் எடுபடவில்லை என்றேசொல்லவேண்டும்.

—''கலாநேசன்''

ஃ ஃ ஃ

'பாகப்பிரிவு'

(நாடகம்)

கைதடி தெற்குமின்னொளி நாடகமன்றத்தாரின் 'பாகப் பிரிவு' என்ற நாடகம் 15-5-65ல் மேடையேற்றப்பட்டது. இது ஓர் சமூக நாடகம்.

முத்து என்பவர் வேலாயுதம் என்ற ஜமீந்தாரிடம் வேலைபார்த்து வந்தவர். முத்துவின் இருபிள்ளைகளான சுந்தர், குமார் என்பவர்கள் இணைபிரியாத சகோதரர்கள். இவர்களை அடிமைப் படுத்துவதற்காக முத்துவை திருடனென குற்றம் சாட்டி சிறைக்கனுப்புகிருர் ஜமீந்தார். இங்கிருந்து கதை வளர்கிறது.

சுந்தராக சீ, செல்லையா நடித்தது நன்ருகஇருந்தது. குமாராக க. சிவஞானம் நடித்தார். ஜமீந்தாராக சின்னப்புவும், முத்துவாக க. பொன்னுவும், பிரேமாவாக க. சின்னத்துரையும், டாக்டராக கு. ஐ. இராஜேந்திரனும், தருமுவாக வ. திருகோணமும், வசந்தாவாக சோ. செல்வத்துரையும் நடித்தார்கள்.

நகைச்சுவை நடிகர்களாக சு. சின்னண்ணு, ப. சின்னத்துரை, மா. பொன்னு நடித்தார்கள். இந் நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷன் ஆகியவற்றை சு. சின்னண்ணு பொறுப்பேற்றிருந்தார். மின்னொளி நாடக மன்றக் குழுவினர் இந்நாடகத்தில் பங்கு பற்றினர்.

— கந்த. ஞானமுத்தன்

ஃ ஃ ஃ

உதவி நிதி நாடகம்

மானிப்பாய் திருச்சபை வாலிபர் சங்க நிதிக்காக யாழ் மறுமலர்ச்சி மன்றம் அளித்த ''உன்னையே நீ எண்ணிப்பார்'' என்னும் சமூக நாடகம் மானிப்பாய் மெமோறியல் பாடசாலை மண்டபத்தில் இம்மாதம் முதல் வாரத்தில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் ஞானசிகாமணி அன்னப்பா, எஸ். ஜே. யோசேப்பு, ரி. ரகுநாதன், எஸ். பிரான்சிஸ், க. ஞானபண்டிதன், வே. மண்டலேஸ்வரன், ஜெயபாலசிங்கம், ஏ. மகேஸ்வரன், எஸ். செல்லையா, எஸ். நடேசபாதம், எஸ். கோவிந்தசாமி, செல்வன் ஜெயகுமார் ஆகியோர் நடித்தார்கள்.

காந்திஜி சினிமா படம்

மகாத்மா காந்தியின் வாழ்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டுசுமார் ரூ. 2 கோடியே 40 லட்சம் செலவில் சினிமாப்படம் எடுக்கத் திட்டமிட்டுள்ளவரான பிரபல பிரிட்டிஷ் நடிகர் தயாரிப்பாளர் ரிச்சசர்ட் ஆட்டன் பரோ, காந்திஜியின் வாழ்கையையும் கொள்கையையும் நன்கு படித்துணர்ந்த ஒரு இந்திய டைரக்டரை கூட்டாகச் சேர்த்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத் தயாரிப்பை காந்திஜியின் பிறந்ததினமான அக்டோர் 2-ந் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

ஆட்டன்பரோ அண்மையில் புனுவுக்கு விஜயம் செய்தபோது அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட வட்டாரத்தினர் மேற்படி தகவலை வெளியிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு உடைக் கைத்தொழில் ஆயிரக்கணக்கான யுவர்க்கு வேலைவாய்ப்பளிக்கும்

— ஏ. எம். விஜயநாதன் —

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட மேற்பார்வையாளர், குடிசைக் கைத்தொழில் பகுதி)

ன்ற பதினைந்து ஆண்டுகளுக்குள் இலங்கையின் கைத்தொழில் பல துறைகளிலும் நியாயமான அளவிற்கு விருத்தியடைந்திருக்கிறது. எனினும் தையல் வேலை, உடைகள் தைத்தல் ஆகியதுறையில் வடமாகாணம், கிழ்மாகாணங்களில் விருத்தி செய்வதற்குரிய எல்லா வசதிகளுமிருந்தும் ஸ்தாபனங்களாக உருப்பெற்றுப் போதிய அக்கறை பெறவில்லை. சிரேஷ்டதராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த அநேகர் இருக்கிறார்கள். இவர்களுடைய சொந்த நன்மைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும் இவர்களை இத்துறையில் ஈடுபடச்செய்யலாம்.

அன்றாடம் உபயோகிக்கப்படும் உடுப்புகள் தைத்தல்போன்ற சிறுகைத்தொழில்களை உருவாக்கி விருத்தி செய்து ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் வேலை கொடுக்கும்திட்டம் ஒன்றை நாங்கள்உண்டாக்க யோசித்திருக்கிறோம். இவ்வேலையை வீட்டிலிருந்தே செய்யலாம். சென்ற பதினைந்து வருடங்களுக்குள் சிறுகைத்தொழில் முப்பது பயிற்றப்பட்ட தையல் ஆசிரியர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. பூவேலை, பின்னல்வேலை, சுருக்குவேலை, சட்டைத் தையல் ஆகியவைகளை இவ்வாசிரியர்கள் தமிழ் மாகாணங்களிலுள்ளநிலையங்களில் மாறிமாறிப் பயிற்றுகின்றனர். கைத்தொழில் இலாகாவில் நான் வேலைசெய்த காலத்தில் இத்தையல் நிலையங்களிலும், பெண்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களிலும் தையல்வேலையைப் புகுத்துவதற்குப்பொறுப்பாய் இருந்தேன். இதன்பயனாக இப்பொழுது தையல்வேலை, சட்டைதைத்தல் ஆகியவைகளில் பயிற்றப்பட்ட 6000 பெண்களும், பிரத்தியேகமான தையல் ஸ்தாபனங்களில் பயிற்றப்பட்ட 1000 தையல் விற்பன்னர்களும் இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்கள் உட்படவடமாகாணம் மாத்திரமே ஒவ்வொரு மாதமும் ஏறக்குறைய 10 லட்சம் ரூபாபெறுமதியுள்ள தைக்கப்பட்ட ஷேட், கட்டைக்கால்சட்டை, நீளக் கால்சட்டை, பெண்பிள்ளைகளின் சட்டை, பிள்ளைகளின் உடைகள் ஆகியவற்றை இறக்குமதிசெய்கின்றது. எமது திட்டத்தின் மூலம் இப்பிரமாண்டமான செலவை முற்றாகத்தவிர்க்க முடியாவிட்டாலும் ஓர் அளவுக்காவது தவிர்க்கலாம். மேலும் இத்திட்டம் பாடசாலைப்படிப்புமுடிந்து வெளியேறும் அநேக ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் தையல்காரர்களாகவும், விகிதர்களாகவும், விற்பனை வேண்டுவோராகவும், விற்பனையாளர்களாகவும், பரிசோதகர்களாகவும் வேலைக்கமர இடமளிக்கும்.

இவ்வியக்கம் பெரும்பாலும் இளைப்பாறியஅரசாங்க உத்தியோகத்தர்களைக் கொண்டதாகவே இருக்கும். பங்குகளைச்சேர்த்து போதியளவு நயம்தரக்கூடியமுறையில் பொருட்கள் உற்பத்தி செய்தும்,விற்பனைசெய்தும், பொருளாதார விருத்தியில் பயன்படுத்துவதே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம். பங்காளர்களும் வேலைசெய்வோரும் அங்கத்தவர்களாவர். விற்பனையால் வரும் ஆதாயத்தில் நியாயமான ஒருபகுதி அவர்களுக்கும் கொடுக்கப்படும். வேலைக்கமர்த்தப்படுவோருக்கு அவர்கள் செய்யும் வேலைக்குச் சம்பளம்மாத்திரமல்லஅவர்கள் எடுக்கும் பங்குகளுக்குரிய ஆதாயமும் கொடுக்கப்படும்.

புதியதொரு திட்டம்

அரசாங்கத் தையல் நிலையங்கள் அல்லது தனியார் தையல் நிலையங்கள் எங்கெங்கு இருந்தனவோ அங்கெல்லாம் பகுதிபகுதியாகப் பிரித்து தையல் நிலையங்களை ஸ்தாபிப்பதே நமது புதிய வேலைத்திட்டமாகும். ஒவ்வொரு பகுதியிலுமுள்ள நான்கு பயிற்றப்பட்ட சிரேஷ்ட வேலையாளர்களின் மேற்பார்வையில் 20அல்லது 20க்கு மேற்பட்ட தையற் தொழிலாளர் ஒரு மத்திய இடத்தில் அல்லது தமது வீடுகளில் (எது கூடிய வசதியுடையதோ) வேலைசெய்வார்கள். மேற் பார்வை செய்யும் சிரேஷ்ட வேலையாளர்கள் 10 பங்குகளுக்குக் குறையாமலும், 250 பங்குகளுக்கு மேற்படாமலும் பங்குகள் எடுக்கவேண்டும். ஒருபங்கின் விலை 10/= ஒவ்வொரு தொழிலாளியும் 10 பங்குகளுக்கு 50 வீதம் 2 தொழிலாளர் கூட்டாக ஆகக்குறைந்தது 10 பங்குகள் வாங்கவேண்டும். பங்குகள் எடுப்போர் 50 வீதம் உடனே கட்டவேண்டும். மிகுதி 2 மாதத் தவணைக்குள் கொடுக்கவேண்டும்.

உற்பத்தி உடைகள்

ஸ்தாபனத்தின் தேவைக்கேற்ற விதமாகப் பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டும். பொருட்களைப்பற்றிய விபரங்கள் ஸ்தாபனத்திலிருந்து பெறலாம், அல்லது நிலையத்திற்குப் பரிசோதிக்க வரும் பரிசோதகர்களிடம் பெறலாம். ஸ்தாபனத்தின் தரத்திற்கும், தேவைக்கும் அமையச் செய்யப்படாத எப்பொருள்களையும் நிராகரிக்கும் உரிமை ஸ்தாபனத்திற்கு உண்டு. ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும பொருட்களுக்கு ஸ்தாபனம் பணம்கொடுக்கும். பொருட்களுக்குரிய பணம் உடனுக்குடனே கொடுக்கப்படும். தையல் நிலையங்களுக்குப் பொறுப்பாய் இருப்பவர்களே அங்கு தயாரிக்கப்படும் பொருட்கள், ஸ்தாபனத்தின் விற்பனை நிலையத்திற்குக்கொண்டு போய்ச் சேர்க்கப்படுவதற்குப்பொறுப்பாய் இருப்பர்.

துணிவகைகள்

ஷேட்டுக்கு பொப்ளின், கால்சட்டைக்கு டிறில் போன்ற சாதாரண துணிவகைகள் தையல் நிலையத்திற்கு மொத்த விலைக்குக் கொடுக்கப்படும். பாவாடை, றவுக்கை, பிள்ளைகளின் உடைகள் ஆகியவற்றிற்கு மென்மையான துணிவகைகளை அந்த அந்த நிலையங்களே பெறவேண்டும். இது சம்பந்தமாக சீக்கிரத்தில், துணிகள் நெசவு செய்து வரும் வல்லை நெசவு ஆலை, பலநோக்குக் கூட்டுறவு நெசவு ஆலை கைத்தறி நெசவு நிலையங்கள் போன்றவைகளை ஈண்டு குறிப்பிடுதல் நன்று. பொப்ளின் வகைகள், டிறில் துணிகள், ஏனைய துணிவகைகள் ஆகியவற்றை இந்த நெசவாலைகள் தையல் நிலையங்களுக்கு விற்கக்கூடியதாயிருக்கும். இந்நிலை ஏற்படின் காலப்போக்கில் துணிகளைப்பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது மெல்லமெல்ல நீங்கிவிடும்.

உடுப்புத்தேவைகள் ஸ்தாபனத்திற்குரிய விற்பனை நிலை

(4ம் பக்கம் பார்க்க)

நெசவு தொழில்

— செல்வி க. பூரணம் —

நாம் சுதந்திரத்துடனும் சுபிட்சத்துடனும் வாழ, நம் பொருளாதாரம் பெருகி, நாடு வளமுற உள்நாட்டு உற்பத்திகளைப் பெருக்க ஊக்கமளிக்கவேண்டும். நம் நாட்டில் நெய்யும் ஆடைகளை விரும்பி அணியவேண்டும். நம்நாட்டுக்கைத்தறி உடைகள் சுகாதாரத்திற்கு ஏற்றதாக இருப்பதுடன் வெளிநாட்டுக்குச் செல்லும் பெருந்தொகைப் பணத்தை மிச்சப்படுத்தி நமது நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த வழி செய்கின்றன.

ஒருநாடு தனக்குத்தேவையான அவசியமானபொருள்களைத் தானே பூர்த்திசெய்யும் பொழுதே உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஈழநாடு அந்நியர் ஆட்சியினின்றும் விடுதலைபெற்ற பொழுதும் நாட்டின் சுயதேவைக்கான முயற்சிகள் போதியளவு எடுக்கப்படவில்லை. கடந்தகால அரசாங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்த வழி வகுக்காது நாட்டைஅழிவுப் பாதைக்கு அழைத்துச்செல்லும் மொழி, இனப்பிரச்னைகளிலேயே மக்கள் கவனத்தைத் திருப்பின. இன்றைய தேசிய அரசாங்கம் சாதிமதபேதமற்று எல்லாச் சமூகமக்களின் ஒற்றுமையுடனும் பொருளாதாரத்தை வளம்படுத்த வகை செய்கிறது. தனிப்பட்ட ஸ்தாபனங்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து ஈழத்திருநாட்டில் பசியும் பிணியும் போக்கி வசியும் வளமும் சுரக்க முயற்சி செய்து வருகின்றன.

மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன உணவு, உடை, உறையுள் என்பனவாகும். இன்றைய அரசாங்கம் விவசாயத்திற்கு தமதுதிட்டத்தில் முதலிடம் கொடுத்திருக்கிறது. அதுபோலவே நமக்கு வேண்டிய உடைகளைப் பூர்த்திசெய்வதற்கு தனிப்பட்ட ஸ்தாபனங்களும் அரசாங்கமும் ஆக்கவேலைகளில் ஈடுபட்டுள்ளன. இலங்கை எங்கிலும் பல நெசவு நிலையங்கள் இயங்கிவருகின்றன..வடமாகாணத்தில் கிட்டத்தட்ட நூற்றைந்திற்கு மேற்பட்ட நிலையங்கள் அரசாங்கஉதவியுடனும் நெசவுச்சங்க கூட்டுறவு சமாஜங்களின் உதவியுடனும் தனிப்பட்டவர்களின் உதவியுடனும் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் மக்களுக்கு வேண்டிய சேலைகள், சாரங்கள், துவாய்கள், படுக்கைவிரிப்புக்கள், லேஞ்சிகள் என்பன தயாரிக்கப் படுகின்றன. யாழ்ப்பாண நெசவுநிலைய சமாஜத்தில் உற்பத்தியாக்கப்பட்ட இருபத்தோராயிரம் ரூபா பெறுமதியான துணிகள் கடந்தமாதம் கொழும்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இச் சமாஜங்கள், நாட்டிலுள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து நாட்டுநலனுக்குப் பணியாற்றுவதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு இயங்கிவருவதாக யாழ்ப்பாண நெசவுநிலைய சங்க சமாஜத்தின் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார். அரசாங்கத்தினதும், சமாஜங்களினதும், தனிப்பட்ட ஸ்தாபனங்களினதும் முயற்சியினால் இலங்கைமக்களுக்கு வேண்டிய உடையில் ஒரு பகுதி இவ்வாறு பூர்த்தியாக்கப்படுகின்றது. நாளாந்தம் நெசவுத்தொழில் அபிவிருத்தியடையும் நிலையைப் பார்க்கும்போது விரைவில் இலங்கை மக்களுக்கு வேண்டிய துணிமணிகளை இவ் உற்பத்தி ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்வதுடன் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதிசெய்யும் சூழ்நிலை ஏற்படுவது கூட சாத்தியப்படும் என்ற நம்பிக்கை தோன்றுவதாக உள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள தனிப்பட்ட ஸ்தாபனங்கள் நெசவுத்தொழில் அபிவிருத்தி செய்யும் முயற்சியில் முன்னணியில் நிற்கின்றன. மிகநுட்பமாகவும் அழகாகவும் நெய்வதற்கு வேண்டிய தொழிலாளர் இருக்கின்றனர். எனவே அரசாங்கம் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்குள்ள குறையை நீக்குவதற்கு நூல்களை இறக்குமதிசெய்ய தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு அனுமதியளித்தல் வேண்டும். இதனால் இந் நெசவு நிலையங்கள் கூடிய துணிகளை உற்பத்தி செய்ய முடியும். நமது உடைகளை நாமே உற்பத்திசெய்வதால் வெளிநாட்டிற்குச் செல்லும் பணம் மிச்சப்படுத்தப்படுகிறது. இந்நெசவு நிலையங்கள் பலருக்கு வேலைவாய்ப்பளிப்பதால் வேலையில்லாப் பிரச்னைக்கும் ஓரளவு தீர்வு ஏற்படுகிறது.

மொழி, சமயம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் எல்லோருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்த நம் முன்னோர் பாம்பின் தோல், பாலாடைபோன்றமெல்லிய பளபளப்பான பட்டாடைகளை நெய்துஉடுத்தனர் என்பதைச் சங்க இலக்கியத்தில் நாம் காண்கிறோம். இன்று செல்வம் கொழிக்கும் நாகரிகமக்களாகத் திகழும் நாட்டினர் அன்று நாடோடிகளாக வாழ்க்கைநடாத்தும் போது தமிழ் மக்கள் பட்டாடை உடுத்து நாகரிக வாழ்க்கையை நடாத்தியிருந்தலை இலக்கிய வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இத்தகைய மரபில் வந்த நாம் அந்நியர் ஆட்சியினாலும் அதன்பின் ஆளுங்கட்சியினரின் குறுகிய மனப்பான்மையினாலும் சின்னாபின்னப்பட்டு பொருளாதார வளம் குன்றி பின்தங்கியவர்களாக வாழ்ந்தோம். தேசிய ஒற்றுமை உருவாக்கப்பட்டு வரும் தற்பொழுது நாம் [illegible] பொருளாதாரத்தைப் பெருக்கி அந்நிய நாடுகளை நம்பிவாழ்தலைக் கைவிடுவோமேயானால் நாடு சுபிட்சமடையும். அற்ப பிரச்னைகள் தானாக மறையும். மக்கள் மகிழ்வுடன் வாழ்வர்.

நாட்டுவளத்தில் நாட்டம் கொண்ட மக்கள்உள்நாட்டு உற்பத்திகட்கு ஊக்கமளித்தல் வேண்டும். இங்கு நெய்யப்படும் ஆடைகளை விரும்பி வாங்கி அணிய வேண்டும். அதனால் எத்தனையோ மக்களுக்கு வாழ்வளிக்கிறோம். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த உதவி செய்கிறோம். நம்மை நாமே ஆளும் சுதந்திரத்தைப் பெற்று நாம் உய்யவும் வழி வகுக்கிறோம்.

'செய்யும்
தொழிலெல்லாம்
சீர்தூக்கிப்
பார்க்கின் நெய்யும்
தொழிலுக்கு நிகராமோ'

காதலன்று...

"நீ[illegible]"

கடன் முழுகிக் கண்டெடுத்த முத்தே யென்பர்
கற்கண்டே கனிச்சாறே தேனே யென்பர்
மடல் விரித்து மணம்பரப்பு மலரே யென்பர்
மாசறுவெண் டிங்களன்ன முகத்தா யென்பர்
கடலினுமெங் காதலனி பெரிதே யென்பர்
காதன்மொழி பலபேசிக் கனிய வைப்பர்
உடலிச்சை தீர்ப்பதற்கா யுறுதி சொல்வர்
ஊரறியத் திருமணந்தாஞ் செய்வதாக

என்றுதிரு மணஞ்செய்வீ ரென்று கேட்பின்
ஏதாவ தொருநாளை யெடுத்துச் சொல்வர்
என்றுவரு மோவந்நா ளென்று நீவிர்
ஏங்கிநிற்க வந்நாளும் வந்து சேரும்
அன்றுறுதி சொல்லியுமை யகன்ற வந்த
''அவர்'' மட்டு மன்றல்ல வதற்குப் பின்பும்
என்றுமேதான் வரமாட்டா ரேழை யும்மை
ஏமாற்றித் தவிதவிக்க விட்டுச் செல்வர்

''அவர்'' வருவா ரெனவெண்ணி யாசை மேவ
ஆண்டுபல காத்திருப்பீ ருறுதி யாக
"அவர்"வரவே மாட்டாரென் றெவர்சொன் னாலும்
அவர்சொல்லை மறுத்துரைப்பீர் மடமையாலே
நவவுலக வஞ்சகர்தம் நயவு ரையால்
நாணிழந்து நலனிழந்து நாளும் வாட்டும்
கவலைமேவ கவினிழந்து கனிவி ழந்து
காலமெலாங் காத்திருந்து வாழ்வி ழப்பீர்

காதைகளிற் கவிதைகளில் வாழுங்காதல்
கனவுலகில் வாழுகின்ற கவிக ளுள்ளம்
போதையுறும் போழ்துகண்ட பொருளே யன்றிப்
பொருந்திடாதிவ் வுலகியலுக் குணர்வீர் சற்றும்
பாதையினிற் பள்ளியினிற் பணிம னையிற்
பருவவுணர் வெழுச்சியிலே தோன்றுங் காதல்
காதலன்று கலவிவிழை கீழ்மை மிக்க
காமமது கடுகளவு மையம் வேண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 09 23 5 65

சக்தி வடிவம்

லட்சுமி ஒரு கூலிப் பெண். நான் கூலிக்கு வேலை செய்பவர். அவர் வசிப்பது குப்பைமேடு. அதன் பெயர் அது. "நான் மதராஸ் பெம்பிளே இல்லீங்க. மதுரைதான் எனது ஊர்" என்கிறார்.

ஸ்கூட்டரில் சென்ற ஒருவர் வீதியில் நடந்து சென்ற மற்றொருவருடன் மோதிவிட்டார். இருவருக்கும் பலத்த காயம். இரத்த வெள்ளத்தில் இருவரும் மூழ்கிக் கிடக்கின்றனர். காலை வேளை. பலரும் தங்கள் தங்கள் தொழிலுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். மேல்நாட்டு உடையணிந்த படித்தவர்களும் உத்தியோகத்துக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். விபத்தில் சிக்கி வீதியில் உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் இருவரையும் அவர்களும் பார்க்கின்றனர். பார்த்து விட்டு பச்சாத்தாபப் படுகின்றனர். அவ்வளவுதான் மேலே. தங்கள் வேலையை பார்க்கசென்றுவிடுகின்றனர். வேலையில்லாத மற்றும் சிலர் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். தேனம்பேட்டையில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது. அங்கு வழமைபோல் வேலை செய்ய வந்த லட்சுமி வீதியில் சனக் கூட்டத்தைக் கண்டதும் எட்டிப் பார்க்கிறார். உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்து விட்டுச் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. அவர்களின் உயிரைக் காப்பாற்ற முன்வருகிறார். சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்களை உதவிக்கு அழைக்கிறார். யாரும் முன்வரவில்லை. அப்பாதையால் சென்று கொண்டிருந்த சில வாடகைக் கார்களையும் நிறுத்தி உதவி கோருகிறார். சிலர் மறுத்துவிட்டனர். ஒரு 'டாக்ஸி'யை நிறுத்தி நிலைமையைச் சொல்கிறார். "உனக்கு இரண்டுமடங்கு கட்டணம் தருகிறேன். முதலில் அவர்களை ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடு அப்புறம் என்மூக்குத்தியை விற்றுவது பணம் தருகிறேன்' என்று கூறுகிறார். 'டாக்ஸி' சாரதிக்கும மனம் இளகிவிட்டது. 'நீ ஒரு பெண்ணாக இருந்தும் இப்படி உதவி செய்ய முன் வந்ததால் நானும் என்கடமையைச் செய்கிறேன்" என்று உதவிக்கு வருகிறார்.

இச்சம்பவம் சில தினங்களுக்கு முன் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னைப் பட்டணத்தில் நடந்தது. லட்சுமிகள் கிரகலட்சுமிகள் மட்டுமல்ல. பொதுவாழ்வில் வீராங்கனைகளும் கூட. கண்ணகி, நளாயினி போன்ற பண்டைக்காலப் பெண்களும் ஜான்ஸிராணி, லட்சுமிபாய் போன்ற பெண்களும் இன்றும் இருக்கின்றனர் என்பதற்கு 'குப்பைமேடு' லட்சுமியின் செயல் ஒரு சான்று. பெண்களைச் சக்தியாக வழிபடுவது தமிழர் பண்பு இப்பண்பினின்றும் தமிழ்ச் சமுதாயம் சமீபத்தில் பிறழ்ந்து விட்டது. இன்றைய கஷ்டங்களுக்கு இதுவும ஒரு காரணமாக இருக்கலாம். இதற்குப் பெண்களிலும் தவறு இருக்கலாம். லட்சுமிபோன்று மற்றும் பெண்களும் இருந்தால் தமிழ்ச் சமுதாயம் இன்றை நிலைக்கு வந்திருக்க இடமில்லை.

தமிழ் நாட்டில்தான் லட்சுமிகள் இருக்கிறார்கள் என்று இல்லை. இங்கும் இருக்கிறார்கள். 'மீனாட்சிகள இங்கிருந்து அனுப்பப்படவேண்டும்' என்று கூறியவர்கள் பலர் இருக்த இடமே தெரியாமல் போயிருக்கிறார்கள். இதற்கு லட்சுமிகளும் மீனாட்சிகளும் காரணமில்லையென்று சொல்லமுடியுமா? பெண்களைச் சக்திவடிவமாகக் கண்டார் பாரதியார். அன்னை பராசக்தி அவருக்கு அருள் புரிந்தாள் அவள் அருளை அவர் வேண்டினார். அது அவருக்குக் கிடைத்தது. ஆண் மக்கள் பெண்களை வெறும் இச்சைப் பொருளாக கணிககாமல் சக்திவடிவமாகக் கண்டால் சமுதாயம் முன்னேறும் பெண்களும் தங்கள் சக்தியை உணர்ந்து கொண்டாலே இது சாத்தியமாகும்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

வெண்ணிலாக் கற்றைற
கான்று விளங்குமோர்
பிறைக் கோடின்றி
பெண்ணிலோர் பாகங்
கூந்தற், பிடியென
விருந்த வாற்றான்
பெண்ணொரு பாகம்
வைத்த பிஞ்ஞகனுருவு
காட்டும்
அண்ணலங்களி நல்யானை
யடிமலர்சென்னி வைப்
பாம்.

வரலாறு:- செந்தமிழ்நாட்டில் சுந்தரவரங்கெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் தட்பமிக்க புட்பங்களின் ஒட்பத்தினால் பொலிந்து இன்னிசைதழீஇய இசைவாணர்கள் மலிந்து செந்தமிழ் நாட்டிற்கும் சைவத்திரு நாட்டிற்கும் நீங்காப்புகழை ஓங்கவைத்த புலவர் பெருமக்களாலும்தாளாமைமிக்க வேளாண்மை மக்களாலும் கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியாய் இறைவன்பாத மலர்களை அல்லும் பகலும் வழிபடும் புண்ணிய சீலர்களாலும் சிறப்புற்று விளங்குவது இணுவையம்பதி.

இற்றைக்கு ஏறக்குறைய 450 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருத்து அரசாண்ட தமிழ் மன்னனாகிய பராாசசேகரன் என்பான் இவ்வாலயத்தை நிர்மாணித்துவிநாகயப்பெருமானை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வரலாயினன். அக்காரணத்தால் இக்கோவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் என விளங்கிற்று. பின் இவ்வூர்ப்பெருமக்கள் விநாயகப்பெருமானைப் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று வரலாயினர்.

1858-ம் ஆண்டில் புலவர் பெருமானுகவும் மகாபாண்டித்தியமுள்ளவராயும்விளங்கிய பொன்னம்பலம் கதிர்காமராகிய மகாவித்துவான் அம்பிகைபாக உபாத்தியார்களும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனும் கடவுள் பக்தி, அடக்கம், வாய்மை ஆதியாம் சுகுணங்கள் அமையப்பெற்றவருமாகியமயிலர் ஆறுமுகம் அவர்களும் புண்ணிய சீலர்களாகியஇவ்வூர்ப் பெருமக்களின் உதவியோடு, அவ்விடத்தில் ஸ்ரீவிநாயகப் பெருமானுக்குசாந்துக்கட்டினால் சிறுகோவில் அமைத்துஸ்ரீவிநாயகப்பெருமானைப்பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். அன்று தொடக்கம் அப்பெருமான் சகல ஆன்ம கருணை பாலித்து வருகின்றார்.

இதற்கு முன் இவ்வாலயம் போர்த்துக்கீசரால் இடிபட்டு அங்கிருந்த மூர்த்திகளும் களவாடப்பெற்றன என்பது ஐதீகம். இப்பொழுது இவ்வாலயம் இவ்வூர் பெருமக்களின் அன்பினாலும் அயரா முயற்சியாலும்திரவியோபகாரத்தாலும் கற்கோயிலாகக்கட்டப் பெற்றுச் சகல சிறப்புக்களோடும் விளங்குகின்றது. வானளாவிய மணிக்கூட்டுக்கோபுரம் மிகுந்த அழகினைக்கொடுக்கின்றது. இன்னும் ராஜகோபுரம் எழுப்புவதற்கு அஸ்திவாரம் இடப்பட்டு வேலைகள் விரைவாய் நடைபெற்றுவருகின்றன. ஸ்ரீவிநாயகப்பெருமானுக்கு சிறந்த ரதம் ஒன்று பலவித சிற்பங்களோடும்சிறப்புறச்செய்யப் பெற்றுவருவது பெருமகிழ்ச்சியாகும் பிரணவ மூர்த்தியாகிய விநாயகப்பெருமான் கருணை மழைபொழிந்து எல்லாரையும் இரட்சித்து வருகின்றார். விநாயகப்பெருமானின் மகோற்சவம் வைகாசிமாதம் 10-ம் திகதி ஆரம்பமாகின்றது. மறுநாள் துவஜா ரோகணமாகும்.

ஸ்ரீவிநாயகப் பெருமான் ஒரு கூறுகொம்புடையலால் ஆண்போலவும் மற்றொரு கூறு அஃகின்மையாற்பெண் போலவும் இரண்டும் கூடியமையால் அலி போலவும் விளங்குமாற்றால் அவன், அவள், அது என்னும் தன்மையதாய் சராசரங்களாகிய சுத்தசத்தாய் எல்லாமாய் அல்லவுமாய் சிவத்தின் அன்பையும், அவர்கொண்ட வடிவம் இருபத்தைந்தனுள் ஒன்றாகியசக்தி ஒரு கூறாயும் சிவம் ஒருகூறாயும் அமைந்துள்ள அர்த்தநாரீஸ்வர வடிவத்தன்மையைக் காட்டிய பரம கருணாமூர்த்தி ஆகிறார்.

— இ. வை. விநாயகமூர்த்தி

வைத்தியரும் மருந்தும்

— வினோபாஜி

கிராமத்தில் ஒருவர் நோய்வாய்ப் படுகிறார், அங்கே ஒரு டாக்டர் இருந்தும் அவர் அந்த நோயாளியைப்பார்க்கப்போகமாட்டார்; போவதற்கு பணம் கொடுக்கவேண்டும். பணம் கிடைத்துவிட்டால் போய்ப் பார்ப்பார். டாக்டர் தாம் கொடுக்கும் மருந்துக்கு கிரயம் வாங்கிக்கொள்வது சரி. போய்ப் பார்ப்பதற்குப் பணமா? அன்பினால்போய்ப் பார்க்கக்கூடாதா? அதில் சிறிதுநேரம் செலவழிந்தால் என்னபோய்விடும்? போய்ப் பார்ப்பதற்கும் பணம்கேட்பதில் அவரது சித்தமே வெளியாகிறது. டாக்டர் என்றால் நோயாளிகளைப் போய்ப்பார்க்கவே வேண்டும். இதுஅவர்கள் கடமை. ஆனால் அவரும் பணம்கேட்கிறார். அதாவது பணக்காரனுக்கு நோய் வந்தால் பணம் கிடைக்குமென்று போய்ப்பார்ப்பார். நோய் சாதாரணமானதோ, கொடியதோ பணத்தைக் கீழே வைத்தால் அவர் கிழம்பி வருவார். பணமில்லாத போது டாக்டரைப்பற்றி நினைக்கவே வேண்டியதில்லை. ஆமாம். பணம் கேட்கக்கூடாதென்கிறீர்களே. டாக்டர் எப்படிச் சீவிப்பது என்றுகேட்கலாம். அதற்கு நான் சொல்லும் பதில், ஒரு டாக்டர் தம் நேரம் முழுவதையும் மக்களுக்கு உதவுவதிலேயே செலவழிப்பதானால் அருக்கு தம் வீட்டுக்கவலையே இருக்க வேண்டியதில்லை. அந்தப் பொறுப்பை மக்கள் ஏற்பார்கள் என்பது தான். கிராமத்தில் ஒரு வைத்தியர் அல்லது டாக்டர் இவ்வாறு இருந்துவந்தால் அவருக்கு எல்லா வீடுகளிலிருந்தும் தேவையானதெல்லாம் கிடைக்கும். கிராமத்தார் அத்தனைபேரும் அவருக்கு கவலையில்லாதபடி பார்த்துக்கொள்வார்கள். ஆகையால் நோயளிகளைப் பார்க்கப்போவதற்கு அவர்பணம் கேட்கக்கூடாது. எந்த வீட்டிலும் அழைத்தாலும் போய்ப் பார்க்கவேண்டும். இது மனிதன் சாதாரண மாய் செய்யவேண்டியகாரியம். என்னைப்பார்க்கவரும் டாக்டர் பணம் எதிர்பார்ப்பாரானால் நான் அவர் முகத்தில் விழிக்கவே விரும்பவே மாட்டேன். 'இந்த டாக்டர் செய்யும் வைத்தியம் எனக்கு வேண்டாம்' என்று சொல்லிவிடுவேன். டாக்டரின் உள்ளத்தில் அன்பு நிரம்பித்ததும்ப வேண்டும். அன்பு இல்லாது மருந்துமட்டும் கொடுப்பதானால் நோய் தீராது.

நோயுற்றவன் இறந்தால் கடவுள் அவனைக் கொன்றதாகவும், நோய் நீங்கிப் பிழைத்தால் டாக்டர் பிழைப்பித்ததாகவும் சொல்லுகிறோம். சாவின் பொறுப்பைக்கடவுளின் தலையில் போடும்போது காப்பாற்றுவதற்கு டாக்டராவது? உயிரைப்பறிப்பவன் கடவுளானால் அவனே காக்கவும் செய்வான். டாக்டர் என்பவன் இடையில் வந்து பார்க்கிறான்; சிறிது அனுதாபம் தெரிவிக்கிறான். இதைத் தவிர டாக்டர் செய்துவிடுவது ஒன்றுமில்லை. உலகில் டாக்டர்களேயில்லாது போய்விட்டால் எல்லோரும் இறந்தாபோய்விடுவார்கள்? ஒருநாளும் இல்லை. டாக்டர் இல்லையென்றதும் எல்லோரும் கவலையுடன் கணக்காக பொறுப்பை உணர்ந்து, தேவையானதை அளவாகச் சாப்பிட்டுவருவார்கள். இந்தக் காலத்திய டாக்டர்கள் பத்தியமேதேவையில்லை என்று சொல்லி விடுகிறார்களே, பழைய காலத்தில் என்றால் வைத்தியர்கள்தாம் கொடுக்கும் மருந்தைவிட பத்தியமே முக்கியமென்பார்கள். ஆனால் இன்றோ டாக்டர்கள் எதைவேண்டுமானாலும் இஷ்டம்போல் தின்னலாம் என்கிறார்கள். நோயாளிகள்சொல்லுவதும் வேடிக்கையாய்த்தான்இருக்கிறது. ஒருடாக்டர் 'இதைச் சாப்பிடலாம், இதைச் சாப்பிடக் கூடாது' என்றுசொன்னால், 'இதற்கா உங்களைக் கூப்பிட்டேன்?' என்று அவரிடம் நொந்து கொள்ளுகிறார்கள். இவ்வளவு லட்சணமாய் இருக்கிறது இப்போது எல்லாம்!

மருந்து செய்யு
வினோபா

டாக்டர் ஒருமருந்தை அளித்து ஒரு நோயைத்தீர்க்கையில் உடன் இன்னொரு நோயை உண்டாக்கிவிடுகிறது. 15நாட்கள் ஒருமருந்து சாப்பிட்டதும் ஒரு நோய் தீர்ந்ததென்றால், அது தீர்ந்த அடியிலேயே அந்த மருந்தே இன்னொரு நோயைக் கிளப்பிவிட்டுவிடுகிறது. இப்போது கொடுக்கப்படும் பலமருந்துகளினால் இவ்வாறுதான் ஆகிறது. இப்படியிருந்தும் முதலில் நோய் தீர்ந்த திருப்தியில் நோயாளி அதே டாக்டரைத் தான் தேடிப்போகிறார். 8 நாளில் நோய் தீர்ந்துவிட்டதே, இந்தப் புதிய நோயைப் போக்கவும் அவரால்தான் ஆகும் என்று நினைக்கிறார். இதனால் வீட்டில் புகுந்த மருந்துப் புட்டி அங்கிருந்து நகருவதேயில்லை. நோயாளியின் சவத்தோடு தான் அதுவெளியேறுகிறது. நகரங்களில் இந்தக்காலத்தில் எப்படியிருக்கிறது தெரிமா? கிராமங்களிலோ ஒரு வீடு என்றால் அதில் தாய் தந்தை, அண்ணன் தம்பி முதலியோர் இருக்கிறார்கள். ஆனால் நகரங்களிலோ ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குடும்ப டாக்டர் இருக்கிறார். அவருக்கு குடும்பத்தில் நீடித்த இடம் ஏற்பட்டுவிடுகிறது. குடும்பத்தில் நோய் தோன்றும்பொழுது அவர் வந்து பார்ப்பதும், பணம்பெறுவதுமாய் இருக்கிறார். அவரை குடும்படாக்டர் என்றுசொல்லி பெருமைப்படுகிறார்கள், குடும்ப டாக்டர் என்றால் குடும்பத்தை உறிஞ்சிப் பிழைக்கும் டாக்டர் என்றே அர்த்தம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் பதியப்பட்டு அளவுகளும் எடுக்கப்படும். கட்டைக்காற்சட்டை, ஷேட், நீளக் காற்சட்டை, சிறுவரின் உடுப்பு ஆகியவற்றிற்கே பதிவுகள் எடுக்கப்படும். சப்பாத்து, தொப்பி, குழந்தைகளின்குல்லாய்கள், கால்மேஸ் ஆகியவைகளும் படிப்படியாக எமது விற்பனைப்பகுதியிற் சேர்க்கப்படும்.

முக்கியமாக வட மாகாணத்திலும், கிழமாகாணத்திலும் கைத்தொழிலை விருத்திசெய்வதும் குறிப்பாகத் துணிவேலை விருத்தியடைந்திருந்தும் முன்பு கூறப்பட்ட உடுப்புவகைகளை உற்பத்தி செய்வதையும் விற்பனை செய்வதையும் போதியளவு விருத்தி செய்யாத இடங்களில் விருத்திசெய்வதுமே இவ்வியக்கத்தின்நோக்கமாகும். சுருங்கக்கூறின், தொழில் திறமை பயன்படும் வகையில் ஆண்பிள்ளைகள், பெண் பிள்ளைகள் எல்லோருக்கும் நன்மைபயக்கும் கைத்தொழிலில் திட்டவட்டமானதும் ஒழுங்குபடுத்தப் பட்டதுமாகிய பயிற்சியளித்து அவர்களை வாழ்க்கைக்குதவுமாறு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கப்பேனா

கடந்த வாரம் இருபத்திரிகைக் காரர்களின் பெயர்கள் அடிபட்டன. கொழும்பிலுள்ள அலோஸியேட்டட் பத்திரிகை ஸ்தாபனத்தின் அதிபர் எஸ்மண்ட் விக்ரமசிங்கா ஒருவர். லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகை நிருபர் ஸ்டேஸி மற்றொருவர்.

இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் வெற்றிகரமாகச் செயலாற்றியதற்காக எஸ்மண்டுக்கு சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தங்கப்பேனா விருதை அளித்துக் கௌரவித்தது. ஸ்ரீமதி பண்டாரநாயகாவின் ஆட்சிக்காலத்தில் மயிலிராவணன் தலைபோல ஒன்றன்பின் ஒன்றாக சுமார் 15 பத்திரிகை நகல் மசோதாக்கள் முளைத்தன. ஆனால் இவற்றை ஒன்றுவிடாமல் கொன்ற பெருமை பெரும்பாலும் பத்திரிகைகளுக்கே உரியது. முதலில் தற்காப்பு யுத்தத்திலிறங்கிய பத்திரிகைகள், பின் வலுத்தாக்குதலிலும் ஈடுபட்டு ஜனநாயக சுதந்திரத்தை நிலைநாட்டின. இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கியது எஸ்மண்டின் ஏரிக்கரைப் பத்திரிகைகள் என்பதில் சந்தேகமில்லை. விடாப்பிடியாக, முழுமூச்சாக, தொடர்ச்சியாகப் போராடி ஜனநாயகம் தழைக்க இந்நாட்டுப் பத்திரிகைகள் உதவிசெய்ததை மறக்க முடியாது. வாலிவிட வலிமையுள்ளது பேனா என்ற நெப்போலியனின் கருத்து எவ்வளவு சரி என்பதை இந்த தங்கப்பேனா பரிசு நிருபித்துவிட்டது.

★

ஸ்டேஸியும்

பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் ஸ்டேஸியின் கதை சுவாரஸ்யமானது. குளு குளு ஊட்டியில் அவர் சூடான விஷயத்தைக் கிளப்பிவிட்டார். சிறைப்பட்டுள்ள ஷேக் அப்துல்லாவை பொய்யான பெயர் கூறி சந்தித்ததின் மூலம், அவரும் சிறையில் வைக்கப்பட்டார். இந்த விஷயம் இந்தியா முழுவதும் பரவி, லோகசபைக்கும், பின் பிரிட்டிஷ் காமன்ஸ் சபைக்கும், வந்தது. லண்டனில் காமன்வெல்த் உறவுமந்திரி, இந்திய உள்நாட்டு மந்திரி, சென்னை அரசாங்கம் ஆகியன ஸ்டேஸி பற்றி பல அறிக்கைகள்விட நேர்ந்தது. ராஜதந்திரத் தூதர்கள் பலர் அவர் விஷயத்தில் தலையிட நேர்ந்தது.

ஸ்டேஸி சாதாரண ஆளல்ல. லண்டன் பிளீட் வீதி பத்திரிகை உலகில் பிரபல்யம் பெற்றவர். பெரிய ஓர் பத்திரிகையின் நிருபர். தனது பத்திரிகைக்கு விசேஷ செய்திகளைச் சேகரிக்கும் முயற்சியில் பல முறை சிறைப்பட்டவர்.

கட்ச் சண்டைபற்றித் தகவல் சேகரிக்க லண்டலிருந்து அவர் கராச்சி வந்தார். பின் இந்தியாவில்புகுந்துதெற்கே நெடுந்தூரம் பிரயாணம் செய்து உதகமண்டலம் போனர். ஷேக் அப்துல்லாவுடன் பிரத்தியேகப்பேட்டி நடத்த, ''மாறுவேஷ''த்தில் செயலாற்றினர்.

இந்தியா சம்பந்தமாக ஸ்டேஸியின் கருத்துக்களும், அவரது பத்திரிகையின் கருத்துக்களும் ஒரேமாதிரியானவை. அதாவது, இந்தியாவின் போக்கு பற்றி மாறுன கருத்துக்களைக் கொண்டவை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஸ்டேஸி பிரபல்யம் பெற்ற நிருபர்மட்டுமல்ல. காமன்ஸ் சபையில் கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பாக தேர்தலுக்கு நிற்கவிருக்கும் ஒரு அபேட்சகராகவும் அவர் கருதப்படுகிறார்.

பிவர்புரூக் பிரபுவின் கருத்துக்களைக் கொண்ட ஸ்டேஸி, அப்துல்லாவுடன் பேட்டி நடத்தினால் எப்படி அது பிரசுரமாகும் என்பதும், வெளிநாட்டில் இந்தியாவின் மானத்தை எப்படி அவர் வாங்குவார் என்பதும் டில்லி அரசாங்கத்துக்குத் தெரியும்.



உலகமேடை

பேட்டியை அவர் பிரசுரிக்காவிட்டாலும் கூட, தாம் நடத்தப்பட்டவிதம்குறித்து அவர் லண்டனில் வெளியிட்ட அறிக்கை எவ்வளவு முரணுனது - மோசமானது என்பதை சென்னை அரசாங்கம் அறிவித்தது.

ஸ்டேஸியைப் பற்றிக் கூறும்போது பிரபலமான வேறு சில சர்வதேச நிருபர்களின் நினைவும் ஞாபகத்துக்கு வரத்தான் செய்யும். மிகவும் கெட்டிக்காரர்களும், செல்வாக்குப்பெற்றவர்களுமான நிருபர்கள் பலர் மேற்கு நாடுகளில் இருக்கிறார்கள். பிரபலமான ராஜதந்திரிகளைக்கூட கேள்வி மூலம் மடக்கிவிடும் சாமர்த்தியமும், விஷய ஞானமும் உள்ளவர்கள் அவர்கள்.

உதாரணமாக, இந்தியா பிரிக்கப்பட்டபோது, கிழக்கு-மேற்கு பாகிஸ்தானிடையே எந்த வகையில் தொடர்பு கொள்வது என்ற அம்சத்தில் ஒரு கேள்வியைப்போட்டதன் மூலம், நீன்காம்பெல் என்ற நிருபர் திரு. ஜின்னுவை மடக்கினர். ஜின்னு பெரிய வழக்கறிஞர். பிரபலமான வாதத் திறமைபெற்ற அரசியல் வாதி. ஆனல் நிருபர் கேட்ட விதத்தில் ''பாதை உரிமை ஒன்றைக்கோருவோம்'' என ஜின்னு பதிலளித்துவிட்டார். இந்தக்கேள்வியும், பதிலும் இந்திய உபகண்டம் முழுவதும் பரவி, பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதுதவிர, அரசாங்கம் அஞ்சும் நிருபர்களும்இருக்கிறார்கள். ட்ரூபியர்ஸன் என்ற பத்திரிகைக்காரர் அமெரிக்காவிலிருக்கிறார். அரசாங்கத்தின் இரகசியங்களை அம்பலத்துக்குக் கொண்டுவருவது அவரதுவேலை. எல்லா இடங்களிலும் அவருக்கு கையாட்கள் உண்டு. அவரிடம் ஆட்சியாளர்களுக்கு ஒரே கிலி.

வால்டர் லிப்மான் என்பவரை பலர் அறிந்திருக்கலாம். பெரிய சர்வதேச நிருபர். இவரும் ஒரு அமெரிக்கர்தான். சர்வதேச நிலைமை குறித்து அவரது கருத்துக்களுக்கு ரர்ஜாங்கத்தலைவர்கள், அரசியல் வாதிகள், சர்வதேச நிபுணர்கள் ஆகியோர் பெரிய மதிப்பு கொடுக்கிறார்கள்.

இப்படி இன்னும் எத்தனையோ பேர் பத்திரிகைக் கலையில் கைதேர்ந்த வித்தகர்கள். வாலிவிட வலிமையுள்ளது பேனா என்ற உண்மையை அவர்கள் நன்கு நிருபித்து வருகிறார்கள்.

★

நேரு நினைவு

இன்னும் மூன்றுநாள் கழிந்தால் மே 27-ம் திகதி வந்துவிடும். சென்ற ஆண்டு இதேதிகதியில்தான் இமயம் போன்ற நேரு மறைந்தார். அவரது முதலாவது சிரார்த்தினம் பாரிலுள்ள பல்லாயிரம் சதுரமைல்களில் அனுஷ்டிக்கப்படும்.

நேரு மறைந்து ஒராண்டு ஆனபோதிலும் இன்னும் உயிர்த்துடிப்புள்ள ஜவஹரையே பலர்காண்கிறார்கள். அவரது இளமைத் தோற்றமும், வசீகரமும், சிவப்பு ரோஜாவும் நெஞ்சைவிட்டு இன்னும் நீங்கவில்லை. உலகெங்கும் இந்தியாவைப் பற்றிப் பேசும்போதெல்லாம் இன்னும் நேருவைப் பற்றியே பேசுகிறார்கள்.

இந்திய மக்களின் வாழ்விலும், சிந்தனையிலும் இரண்டறப் பரிணமித்துவிட்ட ஜவஹர், சாந்திவனத்தில் மீளா நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார். அவரது சமாதியை இடைவிடாது மலர்கள் அலங்கரித்து வருகின்றன.

ஆன்மீக இந்தியாவையே காத்திரு கண்டார். இன்றைய நவ இந்தியாவோ ஜவஹரின் சிருஷ்டி. ஆனல் அது இன்னும் முற்றுப் பெருத ஒரு புரட்சி. அமைதியும், வலிமையும் கொண்ட நவஇந்தியா ஸ்திரத்தன்மையை அடையும் பாதையில் இன்னும் பல மைல்கற்கள் இருக்கின்றன. இப்போது அந்தநாட்டுக்கு பிரசவ வேதனை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல தொல்லைகள், பிரச்னைகள். நேரு என்ற மேரு, ஸ்தூலதேகத்தில் நின்று இன்னும் நாட்டுக்கும், உலகுக்கும் வழிகாட்டி வருகிறது. வாழ்க ஜவஹர் நாமம்.

மேட இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முன்பிருந்தவற்றிலும் பார்க்க சுபபலன்கள் விசேடமாக நடக்க இடமுண்டு. செய்கருமவெற்றி, முயற்சியால் இலாபம் கிட்டுதல், குடும்பத்தில் சுபகருமங்கள் நடத்தல், கொண்டாட்டங்களில் பங்குகொள்ளல், சமூகத்தில் மதிப்புப் பெறுதல், சுகபோகப் பொருட்கள் சேர்க்கை-கொள்வனவு, கல்வித்துறையில் வெற்றி, கமத்தொழிலாளருக்கு சுகம், உத்தியோகத் துறையினருக்கு மத்திம சுகம், பெண்களுக்கு விவாக சுகம், பெண்களங்களும் புதிய சூழல்களில் குடும்ப அமைப்புகளும் ஏற்படல் ஆகிய பலன்கள் காணப்படுகின்றன. மே 25, 26, 28 உத்தம தினங்களாகவும் 27, 29 மத்திமமாகவும் இருக்கும். 23, 24-ல் அமைதியாக இருப்பது நலம். இவை கஷ்டநாட்களாகும்.

ரிஷப இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் அமைதியாக இருப்பது நலம். கஷ்டபலன்கள் கூடுதலாக காணப்படுகின்றன. கல்வித்துறையில் ஈடுபட்டவர்களுக்கும்பெண்களுக்கும் மத்திமத்தில் உத்தமமான பலன்கள் உள. மற்றையோருக்கு அனுவசிய சண்டைசச்சரவுகள், எதிரிகள் அதிகரிப்பு, தேகநலக்குறைவு, வயிற்றில் ரோகங்கள் காணப்படல், சந்தோஷமின்மை, முயற்சிகளில் தடைகள், வருவாய் பாதிக்கப்படல், நண்பர்களே எதிரிகளாதல், உத்தியோகத் துறையில் கஷ்டங்கள், வர்த்தகத் துறையில் அதிக முயற்சியிருப்பினும் பலன் குறைதல் ஆகியன காணப்படும். மே மாதம் 25, 26, 28 சுபதினங்களாகவும் 23, 24 கஷ்ட தினங்களாகவும் இருக்கின்றன.

மிதுன இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுபபலன்களும், அசுபபலன்களும் கலந்து நடக்குமாயினும் கஷ்டங்கள் கூடுதலாக இருக்கின்றன. முயற்சிகளில் ஓரளவு வெற்றி, எதிரிகள் வீழ்ச்சி, பொருள் வரவு ஆதியன இருப்பினும் கஷ்டமான பிரயாணங்கள், தேகநலக்குறைவு, குடும்பத்தில் சச்சரவு, இனத்தவர் அல்லது நண்பர் மரணத்தால் துக்கம், சொத்துக்களில்நட்டங்காணப்படல், கமத்தொழில் ஆதாயக் குறைவு ஆதியனவும் வர்த்தகத் துறையினருக்கு தொழில் விருத்தி, உத்தியோகத் துறையினருக்கு பொதுவாக சாதகநிலைமைகள் அமைதல் காணப்படுகின்றன. பெண்களுக்கு சுபகாலமாயினும் ஆடம்பரச் செலவுகளை மட்டுப்படுத்தல்அவசியமாகும். மேமாதம் 25, 26 சுபதினங்களாகவும், 23, 25 அசுபதினங்களாகவும் 29 மத்திமமாகவும்காணப்படுகின்றன.

கடக இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கோபத்தைக் குறைத்து நடந்தால் குடும்பத்-தகராறுகளையும் அயல் கஷ்டங்களையும் தவிர்க்கலாம். தேகநலத்தைப் பேணுதற்கு முக்கியநடவடிக்கையை மேற்கொள்க. இவ்வாரத்தில் குடும்பச்சச்சரவுகள், அனுவசியமாக எதிரிகள் அதிகரித்தல், தேகநலக்குறைவு, பணமுடை, முயற்சிகளில் நட்டம், இனபந்துக்களாலேயே கஷ்டங்கள் விழைதல் காணப்படுகின்றன. கமத்தொழில் பலன்தருமாயினும் பெருந்திட்டங்களில் ஈடுபடலாகாது. வர்த்தகம் ஏற்றமிறக்கமாகஇருக்கும். உத்தியோகத் துறையில் சிறிது விழிப்புண்டு. பெண்களுக்கு சுபபலன்களுள. சிலருக்கு பிரயாணங்களும் சிலருக்கு சமுதாயத் தொண்டுகளில் மதிப்புணர்ச்சியும் சிலருக்கு தொழிலில் ஏற்றமும்உண்டு. மே 28-ந் தேதிஉத்தமபலன் தரும். 24-ந் தேதி மிக அவதானம் வேண்டும்.

சிங்க இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பொதுவாக திருப்திகரமான பலன்கள் நடக்காதுவிட்டாலும் ஓரளவு [illegible] வெற்றி, சுபகாரியச்சிறப்பு, சுபகருமங்கள், சுகபோகப் பொருட்கள் சேர்க்கை, கல்வித்துறையில் முன்னேற்றம், கமத்தொழிலில் சிறப்பு, உத்தியோகத்தில் சிறப்பு, வர்த்தகத் துறையில் தொழில்விருத்தி, அதிகலாபம்-மதிப்புயர்ச்சி, பெண்களுக்கு முன்னிலும் பார்க்க சிறிது சுகம்கிட்டுதல், ஆண்களால் கஷ்டங்கள் குறைதல், குழந்தைப்பேறுகிடைத்தல், தேகநலம் பாதிக்கப்படல், கல்வித்துறையிலுள்ளார்க்கு வித்தை மேன்மை-மதிப்புயர்ச்சி ஆதியன உண்டு. பணமுடக்கல் போன்றவற்றுக்கு மே 25-ம், குடும்பவிடயங்களுக்கு 26-ம்கல்விச்சிறப்புக்கு 28-ம் நலமான நாட்களாகும். 24-ந் தேதியை தவிர்க்க.

துலா இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சாதாரணமான பலன்கள் நடக்கும். விசேடமாகவும் இருக்காது-அதிக கஷ்டமும் தராது. ஓரளவு வருவாயும் நண்பர்கள் உதவியும் சந்தோஷமும் இருக்கும். மன அமைதியிழப்பு, சிறுசிறு நட்டங்கள் ஏற்படல், தேகநலம் பாதிக்கப்படல், கஷ்ட பிரயாணம், முயற்சித் தடை காணப்படும். குடும்ப சுகமுண்டு. கமத்தொழில் திருப்தியாக இருக்கும். உத்தியோகத் துறையினருக்கு சுபமாகும். வர்த்தகத் துறையினருக்கு விசேடமாகும். பெண்களுக்கு இவ்வாரம் கஷ்டபலன்களுள. ஆண்கள் தொடர்புகளை நீக்கி, பணநிலையைப் பேணி, தேகசுகத்தைக் கவனித்து நடப்பது முக்கியமாகும். கொண்டாட்ட கேளிக்கைகளைத் தவிர்ப்பது அவசியம். மேமாதம் 27-ந் தேதி பிறருடன் சேர்ந்து வேலை செய்க. 28-ந் தேதி பணநிலைமைக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

இந்த வாரம் உங்கள் ராசி பலன் எப்படி ?

தெல்லியூர் எழுதுகிறார்

[விகுவாலசு ஹு வைகாசித் திங்கள் 10 ந் திகதி ஞாயிறு (23-5-65) முதல் 16-ந் திகதி சனிக்கிழமை வரை (29-5-65) உள்ள ஒருவாரப் பலன்கள்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை 7ம்பக்கத் தொடர்ச்சி

சொல்லுகிறீர்களா? ஒரு பெண்ணுக்கு எல்லாருமே எழுந்து இடம்விடவேண்டும் என்கிறீர்களா?''

''நீங்கள் நன்ருகப் பேசுவீர்கள் போலிருக்கிறதே! உங்களுக்கு எந்த ஊரோ?''

''ஏன் ஊருக்கும் பேச்சுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமென்று சொல்லுகிறீர்களோ? நான் இருப்பது காரைநகரில்; வேலை செய்வது கச்சேரியில்! பெயர் சுந்தர்! நீங்கள் ?''

''நான் இருப்பது மானிப்பாயில். வேலை செய்வது அதோ இருக்கிறதே அந்த மருந்துக்கடையில்'' என்று மருந்துக்கடை ஒன்றை நோக்கி கையைநீட்டியவள் ''கடையில் சேர்ந்தது போனவாரம்தான், பெயர் மீனு'' என்ருள்.

''நீங்கள் கூட நன்ருகப் பேசுவீர்கள் போல் இருக்கிறதே! அதோ, பஸ் வருகிறது. இதோ உங்களுக்கு இடம் விடுகிறேன். முன்னுக்குப்போய் ஏறிக் கொள்ளுங்கள். பிறகுஆண்களெல்லாம் கடமை செய்யவில்லை என்று குறைப்படநேரிடலாம்'' என்ருன் சுந்தர் சிரித்தவாறே!

மீனுவும் சுந்தருக்கு முன்னுல் சிரித்தவாறே போய் நின்றுகொண்டு ''நீங்கள் எங்கே போகிறீர்கள்? இது மானிப்பாய் பஸ்அல்லவா?'' என்ருள்.

''நான் ஆனைக்கோட்டையில் ஒரு நண்பனைச் சந்திக்க வேண்டும். சந்தித்த பின் வேறு பஸ் ஏறலாம். வேறு ஏதாவது கேட்க விரும்பினுல்...'' சுந்தர் மீண்டும் சிரித்தான்.

மீனுவும் சிரித்தவாறே ''இதற்கு முன் உங்களோடு யாரோ கதைத்துக்கொண்டிருந்தாரே அவர்...''

''அவர் எனது இன்னெரு நண்பர். பெயர்பத்மநாதன். வேறு ஏதாவது...?''

''மானிப்பாய் ஒன்று. ஆனைக்கோட்டை ஒன்று.'' இது மீனு பஸ் கொண்டக்டரிடம் கூறியது. நீட்டியபணமும் அவளுடையதே!

— 3 —

உடல் நலனைக்கவனியாது உழன்று திரிந்த சுந்தருக்குச் சுகமில்லாமல் வந்து மருத்துவமனைக்கட்டிலில் படுக்க வேண்டி நேரிட்டுவிடுகிறது.

நாளாக நாளாக அவனது உடல்நிலை சிறிது தேறி வந்தது. இதற்கு யார்காரணம்? நோயாளிகளைக் கண்ணும் கருத்துமாக-ஏதோ தனது குடும்பத்தைச்சேர்ந்த ஒருவருக்குப் பணிவிடைகள் செய்வது போல் கவனித்து வரும் அந்தத் தாதி இந்திராதான் என்பது சுந்தரது கருத்து.

மருந்து கொடுப்பதும் ஊசி போடுவதும்தான் அவளது கடமை என்று எண்ணியிருந்த சுந்தர் உணவுப் பிரச்னைகளிலும் தலையிட்டு தகாத உணவு உண்ட போதும் உணவைக் கவனிக்காமல் அல்லது குறைவாக உண்ட போதும் கண்டிப்பதும்கூட அவளது கடமையா என்று எண்ணத் தொடங்கினுன்.

''என்ன அப்படி அகோரமான யோசனை. நோயாளிகள் அப்படியெல்லாம் யோசிக்கக்கூடாது. உங்களுக்கு என்ன கவலை? என்ன வேண்டும்? சொல்லுங்களேன்'' என்றவாறு சுந்தரை நோக்கி வந்தாள் இந்திரா.

''இல்லை மிஸி. எனக்கு என்ன வருத்தம் வந்தாலும் இலேசில் மாறுவதில்லை. அதுதான் யோசனை. எப்பொழுது வீட்டுக்குப் போகலாம் என்றிருக்கிறது'' என்ருன் சுந்தர்.

''மிஸ்டர்! என்ன வருத்தம் வந்தாலும் உங்களுக்கு மாருததற்குக் காரணம் என்ன தெரியுமா?''

''எனக்கெப்படித் தெரியும்! உங்களுக்குத் தானே அதெல்லாம் தெரியவேண்டும்!''

''நீங்கள் சாப்பாட்டில் கவனம் செலுத்துவதில்லை. நன்ருகச்சாப்பிடவேண்டும். இளந்தாரிப்பிள்ளையின் உடம்பு இப்படியா இருக்கும். நல்ல உடம்புக்காரருக்கு நோய் வராது. அப்படியே வந்தாலும் கெதியாய்ப் பறந்துவிடும். நீங்கள் எங்கள் அண்ணனைக் கண்டீர்களென்ருல் ஏங்கிப்போய்விடுவீர்கள்.''

''அப்படியா...? ஏனோ...?'' ஆச்சரியத்துடன் வினவினுன் சுந்தர்.

''அவர் உங்களைப்போல் இரண்டு மடங்கு மொத்தம் இருக்கும்.''

''அது வெறும் நீர்த்தேகம் என்று உங்கள்அம்மா சொல்லுவதில்லையா?''

''அடே அப்பா. அதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கும் ஓர் அண்ணன் இருக்கிருர். அவரும் உங்களைப் போல் மூன்று மடங்கு மொத்தமானவர். ஆனுல் அம்மா 'அது வெறும் நீர்த்தேகம்' என்றுதான் சொல்லுவார்.''

''அப்படியானுல் மொத்தமானவர்களின் கதையே எங்கும் இப்படித்தான் போலிருக்கிறது, அதுஎப்படி இருந்தாலும் சரி நீங்கள் உங்கள் உடம்பைத் தேற்றிக்கொள்ளவேண்டும். அதற்கு என்ன வழியென்ருல்...''

"பொறுங்கள், பொறுங்கள். அந்த வழிகளெல்லாவற்றையும் எனக்குச் சொல்லுவது இருக்கட்டும். முதலில் அவைகளை நீங்கள் கடைப்பிடியுங்கள். நீங்கள் ஏதோ பெரிய ஆள் போலல்லவா கதைக்கிறீர்கள்" என்று 'பெரிய' என்பதை அழுத்தியும் இழுத்தும் சொன்னுன் சுந்தர்.

''போங்கள், உங்களுக்கு ஒன்றுமேசொல்லிக்கொள்ள முடியாது. எதற்கும் பகிடிதான்'' என்று பொய்க் கோபம் காட்டிவிட்டு இந்திரா இன்பநினைவுகளோடு அவ்விடத்திலிருந்து நடந்தாள். சுந்தர் மீண்டும் சிந்தித்தவாறே படுக்கையில் கிடந்தான்.

—4—

''இந்த மருந்து உங்களிடம் இருக்கிறதா பாருங்கள்'' என்றவாறே டாக்டரால் எழுதப்பட்ட துண்டுக்கடதாசியை நீட்டிய பாலசிங்கத்தை நிமிர்ந்து நோக்கிய மீனு ''யாருக்கு பாலசிங்கம் இந்த மருந்து?'' என்ருள்.

''அடே! எனது பெயர் உங்களுக்கு எப்படித்தெரியவந்தது'' என்று ஆச்சரியப்பட்டான் பாலசிங்கம்.

"ஓ...அதுவா? நீங்கள் சுந்தரது நண்பரல்லவா? சுந்தருடன் சேர்த்து ஒருநாள் உங்களையும் கண்டிருக்கிறேன்.''

"அப்படியானுல் உங்களுக்கு சுந்தரைக்கூடத்தெரியுமா? சுந்தர் உங்களுக்கு...?'' பாலசிங்கம் முடிக்கவில்லை.

''அவர் எனக்கு... எனக்கு '' என்று ஏதோ சொல்லமுயன்ற மீனு பின்பு சுருக்கமாக "எனக்குத்தெரிந்தவர்'' என்ருள்.

''அப்படியா, நல்லது. சுந்தருக்குத்தான் இந்தமருந்து. அவன் ஆஸ்பத்திரியில் சுகயீனமாக இருக்கிருன். இந்த மருந்துக்கு இப்போது ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடாக இருப்பதால்தான் வெளியில் எடுத்துப்பாவிக்கும்படி டாக்டர் எழுதிக் கொடுத்தாராம்.''

''ஐயோ! அப்படியா? எனக்குத்தெரியாமல் போய் விட்டதே?'' என்று அதிர்ந்து போனுள் மீனு. அவசரமாக பாலசிங்கம் கேட்ட மருந்தை எடுத்துக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு 'எப்போ ஐந்துமணியாகும்' என்று ஐந்து மணியை எதிர்பார்த்து ஏக்கத்துடன் காத்திருந்தாள்.

—5—

மீனு புன்முறுவல் பூத்தபடி சுந்தரிடம் வந்தாள். நீண்டநேரம் அவனுடன் பேசினுள். பின்பு அவனை விட்டுப் போகும்போது தொங்கிய முகத்துடனும் சோகமே உருவானவளாகவும் காணப்பட்டாள்.

இதையெல்லாம் தூரத்திலிருந்தே கவனித்துக் கொண்டிருந்த இந்திரா சுந்தரை அணுகினுள். மீனு போனதுமுதல் அவன்கூடச் சோகமே உருவாகத்தான் காணப்பட்டான்.

''யார் சுந்தர் அந்தப் பெண்? அவள் ஏன் கவலையுடன் போகிருள்? நீங்கள் கூட எதற்காகக்கவலையுடன் இருக்கிறீர்கள்?'' இந்திராவின் குரலில் ஆவலும் கவலையும் ஒருங்கே பிரதிபலித்தன.

''அவளது பூர்வீகம் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஒருநாள் அவள் பஸ்ஸில் இடமில்லாது தவித்தபோது நான் அவளுக்கு இடம் கொடுத்தேன். அதிலிருந்து அவள் என்னேடு பழகினுள். நான் செய்த உதவிக்காக ஒருநாள் பிரதி உபகாரமாக எனது பஸ் கட்டணத்தையும் அவளே கொடுத்திருக்கிருள். நாங்கள் சந்தித்தால் மனம்விட்டுப் பேசுவோம். சிரித்துக் கதைப்போம். இதையெல்லாம் நான் நட்பு என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன்...

''இரு ஆண்நண்பர்கள்எப்படி எப்படியெல்லாம் மனம் விட்டுக் கதைப்பார்களோ, இரு பெண் நண்பர்கள் எப்படி எப்படியெல்லாம் சிரித்துப்பேசுவார்களோ அப்படி-அப்படிமுழுக்கவும் இல்லாவிட்டாலும் கிட்டத்தட்டஅப்படி.ஓர் ஆணும்ஒரு பெண்ணும் பேசமுடியாதா? அப்படிப்பேசினுல் அதைக் காதல்என்றுதான் சொல்லவேண்டுமா...?

''ஓர் ஆணும் ஒரு பெண்ணும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வேண்டியபோது உதவி செய்தால்-இடுக்கண்களைந்தால் அதைக் காதல் நோக்கம் என்றுதான் கருதவேண்டுமா? ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் அன்பு, இரக்கம், நட்பு என்பதெல்லாம் கிடையாதா...?

''ஓர் ஆணுக்கு, ஆண் நண்பர்கள்தான் இருக்கமுடியுமா? ஒரு பெண்ணுக்குப் பெண் நண்பர்கள்தான் இருக்கமுடியுமா? ஆண்களுக்குப் பெண்நண்பர்களும் பெண்களுக்கு ஆண்நண்பர்களும் இருக்கவே முடியாதா?

''ஆம், இந்திரா! நானும் அவளும் பழகியதை நான் 'நட்பு' என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனுல் அவளோ 'காதல்' என்று நினைத்திருக்கிருள். இது இன்றுதான் எனக்குத் தெரியவந்தது. இதுபோன்ற காதல், சினிமாவும் சிலரது கதைகளும் மக்களுக்குக் கற்றுக்கொடுத்த பாடம் போலும்! நான் அவளது கைத்தலம் பற்றி இழுத்ததில்லை. கண்பொத்தி விளையாடியதில்லை. அப்படியிருந்தாலாவது அவள் அதைக் காதல் என்று கருதியிருக்கலாம்...

''இந்திரா! என்ருலும் எனக்கு ஒரு கவலைதான். அவளது உள்ளத்தை-உள்ளக்கிடக்கையை அறியாது, அவள் காதல் என்று நினைக்குமளவிற்கு அவளுடன்பழகி அவளதுஆசையை வளர்த்து [illegible] என்பதுதான் அக்கவலை.

''வாலிபனுக்கு மற்றும் வேளைகளில் எப்படியிருந்தாலும் பருவம் வந்தபெண்களைக் கண்டால் தகாத ஆசைகளும், விபரீத எண்ணங்களும் எழுவதுண்டாம். ஆனுல் இந்திரா! என்னைப் பொறுத்தரையில் நான் அப்படியல்ல! பெண்களுக்குமுன் நான் நிற்கும்போது கடவுள் சந்நிதானத்தில் நிற்கும் ஓர் உண்மைப் பக்தன் நிலைதான் எனக்கும் ஏற்படுகிறது. அதனுல்தான் மீனுவுடன் கூட நான் அப்படிப் பழகினேன். எடுத்துக்காட்டாக என்னையும் உன்னையும்தான் எடுத்துக்கொள்வோமே! நானும் நீயும்... இந்திரா, நீ எங்கே போய் விட்டாய்.''

(யாவும் கற்பனை)

சிறுவர் பூங்கா

சேவல் கத்துமா?

— எம். கே. ராஜா —

அன்பின் தம்பி தங்கையரே! ஒரு குட்டிக்கதை கூறுகிறேன் கேளுங்கள்.

என் அண்ணுவுக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது. எனவே பேசும்போதெல்லாம் ஆங்கிலக் கதைகளும், ஷேக்ஸ்பியர், தாந்தே, மில்டன் போன்ற இலக்கியமேதைகளின் உதாரணங்களையுமே கூறுவார். நான் சிறுவனுயிருக்கும்போது பள்ளிப் பாடங்களைக் கற்ருல் மாத்திரம் போதாதென்று தினமும் சிறுவர்க்கான நூல்களும், சஞ்சிகைகளும், வண்ண வண்ணப் படங்கள் கொண்ட கதைப்புத்தகங்களும் வாங்கித்தருவார். இதனுல்த்தான் என் அறிவும் வளர்ந்தது. என் அன்பு அண்ணு எனக்கு இப்படிப் புத்தகங்கள் வாங்கித் தந்த பழக்கம் என்னை அட்டையாக ஒட்டிக் கொண்டதால் இப்போதும் கூட கண்ட கடைகளிலெல்லாம்புத்தகங்கள் வாங்கிப்படிப்பதும் என் சகோதரர்களுக்குக் கொடுப்பதுமான பழக்கத்தை என்னுல் விட்டுவிடவே முடியவில்லை. மிகச் சின்னக்கதையானுலும் அதில் நாம் கற்க வேண்டிய போதனைகள் எத்தனையோ இருக்கத்தான் செய்கின்றன.

என்னை விஞ்ஞானம் படிக்க வைத்தார் அப்பா. இரசாயனம்தான் எனது இஷ்ட பாடமாகவுமிருந்தது. என்ருலும் தமிழும் படிக்கவேண்டும் என்றேன். படித்தேன். 'சயன்ஸ்மாணவனுக்குத் தமிழ் எதற்கடா?'-என்று அண்ணுகேலி செய்வார். இப்போதும்கூட தமிழில் எதுவேனும் எனக்குத் தெரியவில்லையென்ருல் அல்லது மறந்து விட்டால் இப்படித்தான். உடனே அதை ஆங்கிலத்தில் விளக்குவார். இதனுலெல்லாம் தமிழைஅவமதிக்கிருர், புறக்கணிக்கிருர் என் அண்ணு என்று பொருளல்ல.

இந்தச் சம்பவம் போன வாரம்தான்நடந்தது. நான் எனது சின்னத் தங்கை தம்பியர்க்குப் பாடம்சொல்லிக் கொடுப்பேன் வீட்டில். இவர்களுக்குப் படிப்பிப்பதென்ருல் எனக்கு மிகுந்த ஆனந்தம். ஏனெனில் பள்ளிக்கூடப் பாடங்களை மாத்திரமன்றி ''பசு ஏன் 'அம்மா' என்கிறது?- பல்லி விழாமல் எப்படிச் சுவரில் நின்று பூச்சிகளைப் பிடிக்கிறது? - புலி காட்டில் மாத்திரந்தான் இருக்குமா? நான் கனவில் ஒரு புலியைக் கண்டேன், அம்மா புலி மணக்கிறது.. யாரும் வெளியே போகவேண்டாம் என்ருள். புலி வந்தால் மணக்குமா அண்ணு?'' - என்றெல்லாம் என்னிடம் கேட்பார்கள். இதையெல்லாம் பச்சிளங் குழந்தைகளுக்கு விளக்குவதில் தனி இன்பம் உண்டல்லவா?

கடந்தவாரம் இவர்களுக்குப் பலவிதமான ஓசை - குரல்களைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தேன். பசு கதறும்-சிங்கம் கர்ச்சிக்கும்-நரி ஊளையிடும்- ஆடு கத்தும்-யானை பிளிறும்-கழுதை கூவும் ...

இந்தஇடத்தில்...'கழுதை கூவும்' என்றவுடன் அவர்கள் நால்வரும் என் முகத்தையே பார்த்தார்கள். நான் கூறியதை அவர்கள் நம்பவில்லை. எனவே 'கழுதை கத்தும்' என்ருள் மங்கை.

''அப்படியில்லை. கழுதை சத்தமிடுவதைக் கேட்டிருக்கிறீர்களா?... அதைக் கூவுதல் என்றுதான் சொல்ல

(9ம் பக்கம் பார்க்க)

திருஞானசம்பந்தர்

-சி தில்லைநடராஜன்-

''ஆளுடைய பிள்ளையார்'' என்றும், ''பாலருவாயர்'' என்றும், "பரசமய கோளரி" என்றும் அழைக்கப்படும் திருஞானசம்பந்த சுவாமிகள் சீர்காழியிலே திருவவதாரம் செய்தார். இவர் தந்தையார் பெயர் சிவபாதவிருதயர்; தாயார் பெயர் பகவதியார். திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்ருண்டிலே வாழ்ந்தவர் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்ருர்கள்.

தமது மூன்ருவது வயதிலேயே ஞானப் பாலுண்ட திருஞானசம்பந்தர் முதன்முதலாக, ''தோடுடைய செவியன் என்னும் அடிகளை முதலாகவுடையதேவாரத்தைப் பாடியருளினுர். அன்றுதொடக்கம் ஞானசம்பந்தர் இறைவனின் திருத்தலங்கள் பலவற்றிற்குச் சென்று, தேவாரங்களும், திருப்பதிகங்களும் பாடி ஆயிரமாயிரம் அற்புதங்களைச் செய்தார்,

வேதாரணியத்தில் வேதங்களால் அடைக்கப்பட்ட திருக்கதவு திறக்கவும் அடைக்கவும் திருஞான சம்பந்தர் திருப்பதிகம் பாடினுர். பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கினுர். சைவநெறி எழுதப்பட்ட ஏட்டை இவர் வைகையாற்றில் விட, அது எதிரேறிச்சென்றது; அதை அவர் நெருப்பில் இடவும் அதுவேகவில்லை. புத்தரை வாதில் வென்ற சம்பந்தர் தமது அற்புதங்களின் மூலம் சைவநெறியின் மேன்மையை உலகறியச் செய்தார்.

இப்படியாக ஒவ்வொரு அற்புதங்களை நிகழ்த்திய போதும் அநேக திருப்பதிகங்கள் பாடினுர். அவற்றில் ஒரு சிலவற்றை மாத்திரம் நாம் படிக்கக் கூடியதாக இருக்கிறது. ஏனையவை காலப்போக்கில் கறையானுக்கிரையாகி விட்டன எனக் கூறுவர்.

ஈழநாட்டிலுள்ள கோணேஸ்வரப் பெருமான் மீதும், திருக்கேதீச்சரப் பெருமான் மீதும் திருபதிகங்கள் பாடியருளிய திருஞானசம்பந்தப் பெருமான் வைகாசி மாதம் மூல நட்சத்திரத்தில் சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு கதை மலர்

காதலிலே பேதலித்தாள் கன்னி ஒருத்தி

— பொ. சண்முகநாதன் —

யாழ்ப்பாணத்திலிருந்து கச்சேரி நோக்கிச் செல்லும் காலி பஸ், மானிப்பாயில் வந்து ஒரு குலுக்குக்குலுக்கி நின்றது. இறங்கவேண்டியவர்கள் எல்லாரும் இறங்கியதும், ஏறவேண்டியவர்கள் ஏறினார்கள். கடைசியாக ஏறிய மீனுவின் முகம் ஒரு கணம் சுருங்கி ஏமாற்றத்தை வெளிக்காட்டியது.

பஸ்ஸினுள்ளே ஓர் ஆசனமோ அல்லது ஒருவருக்குப் போதிய இடமோ கூட காலியாக இல்லாமல் எல்லாம் கணக்காகவே இருந்தது. மீனுவுக்கு பஸ்ஸில் நின்று பிரயாணம் செய்து பழக்கமில்லை. எனவே, சுற்று முற்றும் பார்த்து விட்டு அமைதியாக நின்றாள்.

சுந்தருக்கு மீனுவின் நிலையைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனைப் பொறுத்த வரையில் அவன் மீனுவுக்குத் தனது இடத்தைக் கொடுக்கத் தயாராகவே இருந்தான். ஆனால் அவனுக்குப் பக்கத்திலுள்ள அந்த மனிதர்? அவன் தனது இடத்தை விட்டுக் கொடுக்க உடனே அந்த இடத்தில்-அந்த மனிதருக்குப் பக்கத்தில்-மீனு வந்தமர இது கொழும்புமல்ல, மீனு கொழும்புப் பெண்ணுமல்ல!

சுந்தருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. பக்கத்து மனிதரது சம்மதத்தைக் கூடக் கேட்காமலே மீனுவை விளித்து "பிள்ளை இந்த சீட்டிலே நீங்கள் இருங்கோ. நாங்கள் ஆண்கள்தானே எழுந்து நிற்கிறம்" என்றான். அவளது பதிலுக்குக்காத்திராமல் எழுந்தும்விட்டான். பக்கத்து மனிதரும் என்ன செய்வதென்று வேண்டா வெறுப்பாக எழுந்து இடம் கொடுக்கவேண்டி வந்துவிட்டது.

மீனு சுந்தரை நோக்கி நன்றி கலந்த ஒரு சுந்தரப் புன்னகையை உதிர்த்தது மல்லாமல் "நன்றி, மெத்தப் பெரிய உபகாரம்" என்றும் சொன்னாள்.

பஸ் மானிப்பாயைத் தாண்டுவதற்கு முன்பே அதற்குள் பிரயாணிகள் நிறைந்து வழியத்தொடங்கினார்கள். தொங்கு கம்பியில் தங்கி நிற்பவர்களோ ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களோ எவர்கள் கூடுதலானவர்கள் என்று ஐயுறுமளவிற்கு அவ்வளவு அதிகமான கூட்டம்.

'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்று சொல்லுவதில் எவ்வளவு உண்மை பிருக்கு! என்று யாரோ பேச்சை ஆரம்பிப்பது சுந்தருக்குத் தெளிவாகக் கேட்டது. மீனுவுக்கும்தெளிவாகக் கேட்டது. ஆனால் யார் பேசுவது என்பது இருவருக்குமே தெரியவில்லை. அவ்வளவு நெரிசல்!

"தவறு, தவறு. திருத்திக் கொள்ளும். எல்லாப்பெண்களுக்கும் விட்டுக் கொடுப்பார்களா? வயதுப்பொருத்தம் இருக்கவேண்டும். விருப்பம் இருக்கவேண்டும். வடிவும் இருக்கவேண்டும்" என்றார் இன்னொருவர்.

"சரியாகச் சொன்னீர். இழவிகளோ அல்லது நகையோ நல்ல சேலையோ அணியாத பெண்கள் வந்தால் இவர்கள் இடம்விடுவார்களா? தெரியாத மாதிரி, கண்டும் காணாதது போல், எங்கோ கவனம் செலுத்திக் கொண்டிருப்பவர்கள் போல் இருப்பார்கள்" என்றுஇரண்டாமவரை ஆதரித்தார் வேறொருவர்.

மீனுவுக்கு இதெல்லாம் கேட்கக்கேட்க ஒருபுறம் வெட்கமாக இருந்தது. இன்னொருபுறம் சுந்தருக்காக இரங்கினாள். 'பாவம் அவர் எவ்வளவு நல்லவர். இத்தனை ஆண்களுள் அவர் ஒருவர் தானே துணிந்து எனக்கு இடம் தந்தவர். தந்ததுமல்லாமல் கேலிப் பேச்சுகளுக்குமல்லவா ஆளாகிறார்.'

சுந்தருக்கு, அந்த வம்பு பேசும் வீணர்களுக்குமுன் போய்நிற்கவேண்டும்; அவர்கள் சொல்லியதற்கும் சொல்லப்போவதற்கும் பதிலடி கொடுக்க வேண்டும் என்றெல்லாம் தோன்றியது. ஆனால் பேசியவர்கள் யாரென்றே அவர்களுக்கு முன் போவதற்கோ முடியாத தளவு நெரிசல்.

"என்ன மிஸ்டர்! உங்களைப் பற்றித்தானே பேசுகிறார்கள். இவர்களுக்கு என்ன சொல்லப்போகிறீர்கள்?" என்றார் முன்பு சுந்தருக்குப் பக்கத்திலிருந்து இப்பொழுதும் அவனுக்குப் பக்கத்திலேயே தொங்கு கம்பியில் தொங்கும் பாக்கியம் பெற்ற அந்த மனிதர்!

சுந்தர் அமைதியாக "என்னசொல்லுவது? அவர்கள் தங்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்லுகிறார்கள்" என்றான்.

யாழ்ப்பாணம் வந்ததும் அவள் இறங்கிப் போனாள். அவன் இருந்து போனான். ஆம், அவனுக்குக் கச்சேரியில்தான் வேலை!

— 2 —

பட்டணம் பரபரப்படையும் மாலைநேரம். பஸ் நிலையத்தை நோக்கி 'கியூ' வரிசையில் இடம் பிடிப்பதற்காக துரிதகதியில் நடந்துவந்தாள் மீனு. அங்கே—

அவள் கண்களையே நம்பமுடியவில்லை. அவைகள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. யாரை காலைமுதல் இதுவரை அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்தாளோ--யார் அவளுக்குக் காலையில் பஸ்ஸில் இடங்கொடுத்தானே-அந்த வாலிபன் அவள் நாடி வந்த அதே 'கியூ' வரிசையின் இறுதியில் நின்று கொண்டிருந்தான்.

மீனுவுக்கு காலையில் தனக்கு பஸ்ஸில் இடம் கொடுத்ததற்கு நன்றிதெரிவிப்பது என்பதைச் சாட்டாக வைத்து அவனுடன் கதைப்பதற்கு ஆசையாக இருந்தது. ஆனால் அவனுடன் இன்னொரு வாலிபன் நின்று பேசிக்கொண்டிருக்கிறானே...

மீனுவின் கற்பனைகட்டுக்கு மீறி வளர்ந்தது.

'அவர் ஏன் எனக்கு பஸ்ஸில் இடம் தந்தார்? நான் ஒரு பெண் என்பதாலா?

'சீ...சீ... பெண் என்றால் எல்லா ஆண்களும் இடம் விட்டா தருகிறார்கள்? அத்தனை ஆண்களில் அவர் ஒருவர் தானே இடம் தந்தார். அப்படியானால் யாரோ ஒருவர் அங்கிருந்து சொன்னது போல் அவருக்கு ஏற்றவயதுப் பொருத்தம், டிஷ்டிப் பொருத்தம் எல்லாம் உண்டா? ஏன் எனக்கும் தான்... அவர் எவ்வளவு அழகு!

'அவர்கள் தங்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்லுகிறார்கள் என்றாரே, அதற்கு என்னபொருள் கொள்வது?

'சீ... பேதை மனமே! அவர் அப்படியில்லாமல் 'அவர்கள் சொல்லுவது உண்மைதான். நான் அவளை உண்மையில் விரும்பியபடி விளித்தாரே! அப்படியானால் நான் அவருக்குப் பொருத்தமில்லாதவள் என்று அவர் நினைக்கிறாரோ?

'பிள்ளை என்று அழைக்காமல் 'அன்பே', 'ஆருயிரே', 'மானே', 'தேனே' என்று முதல் முதலில்-அதுவும் பஸ்ஸில் நின்று சொல்லுவார்?'

சுந்தருடன் பேசிக் கொண்டிருந்த வாலிபன் போய்விட்டான். மீனு அவனை நோக்கிப் போனாள்.

"உங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவதென்றே புரியவில்லை. நீங்கள் செய்த உதவிக்கு என்ன பதிலுபகாரம் செய்வதென்றே தெரியவில்லை" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிய சுந்தர் ஒரு கணம் யோசித்து விட்டு "ஓ...நீங்களா? அதற்கென்ன நன்றியும் உபகாரமும். ஓர் ஆண்பிள்ளை செய்ய வேண்டிய கடமையைத் தான் நான் செய்தேன்" என்றான்.

"மிகவும் சுலபமாகச் சொல்லிவிட்டீர்கள். அத்தனை ஆண்கள் செய்யாத கடமையை நீங்கள் ஒருவர் தானே செய்தீர்கள்."

"அப்படியானால் அந்த எல்லாரையுமே செய்யச்

(6-ம் பக்கம் பார்க்க)

படிக்கவும் பந்தடிக்கவும்
பலன் பெற தம்பிக்கு
விசேஷமாக கொடுக்கச் சிறந்தது
மாமைட்

ஓடி ஆடி விளையாடுவதற்கும், ஊக்கத்துடன் பாடங்களை படிப்பதற்கும், நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்வதற்கும் குழந்தைகளுக்கு நிரம்பிய சக்தியும் பெலனும் அவசியம். ஆகவே அவர்களுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவர்களை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம். இவற்றில் இலேசாக பூசி

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.

மாமைட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வானத்தாமரை

குறுநாவல்

— நா. யோகேந்திரநாதன் —

சந்திரா தன்னறைக்கு வந்ததையும், புரபஸர் அவளைத் தடுத்ததையும், பிறகு அவள் அழுது கொண்டு உள்ளே ஓடியதையும் கவனித்த சிவலிங்கத்தின் மனது குழம்பியது. ஏதோ தன்னைப் பற்றிய விஷயம் நடந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான். தன்னை விருந்துக்கு அழைக்காததை அதுவரை அவன் ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை. ஆனால் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அவன் நெஞ்சில் விதம்விதமான எண்ணங்களை எழுப்பி, ஏதேதோ செய்து கொண்டிருந்தன. அவன் மறக்கவேண்டுமென்று ஆசைப்படும் எண்ணங்கள் திரும்பத்திரும்பத் தோன்றி அவன் நெஞ்சைத் துளையிட்டன.

குளிர்ந்த காற்றுச் சிறிது நெஞ்சுக்கு நிம்மதியளிக்கும் என்று கருதிய அவன் அறையைவிட்டுக் கீழேயிறங்கித் தோட்டத்தையடைந்தான். வெளியே பலமான பனிபெய்து கொண்டிருந்தது. உடலை இறுக்கமாகப் பற்றியிருந்த அவனது கம்பளி ஆடைகளையும் மீறி உள்ளேபுகுந்த கடுங்குளிரின் தன்மையை, அவனது எண்ணங்கள் எரிந்து கருகச் செய்துகொண்டிருந்தன.

மெல்ல மலர்ப்புதரைப் பார்த்தான். இரவிலே மலர்ந்து, மணம் கொடுக்கும் வண்ணப்பூக்களில் கண்களைச் செலுத்தினான். அதன் பின்னால் கேட்ட விம்மல் ஒலி அவளைத் திடுக்குற வைத்தது. மலர்களை விலக்கிப் பார்த்தான். மலர்வேலிகளின் மறுபக்கத்தில் இருந்த பெஞ்சுமீதுகண்ணீர் விட்டவாறு சந்திரா அமர்ந்திருந்தாள்.

வேலியைச் சுற்றி அவளிருந்த பக்கமாக அவசர அவசரமாக வந்தான்.

"சந்திரா! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

சிவலிங்கத்தைக் கண்டதுமே, தந்தையிட்ட கட்டளை அவள் நினைவுக்கு வந்தது. என்றுமே தந்தையின் ஆணையை மீறியறியாத சந்திரா அவர் சம்மதம் பெறாமல் சிவலிங்கத்தைச் சந்திப்பதில்லையென நினைத்திருந்தாள். மெல்ல அவ்விடத்தை விட்டுப்போக எத்தனித்தாள்.

"சந்திரா!"

சந்திரமதி நின்று கலங்கிய விழிகளுடன் திரும்பிப்பார்த்தாள்.

"ஏன் சந்திரா உனக்கு என்னில்இவ்வளவுகோபம்?"

சந்திரமதி கண்களை மூடினாள். அவள் தடையைத் தகர்த்தெறிந்து கண்ணீர் வழிந்தோடியது. "சிவா! உங்களை நான் கோபிப்பதா? பக்தன் தெய்வத்தைக் கோபிக்கமுடியுமா?"

"என்னசந்திரா, நீ சொல்வது புரியவில்லையே!"

"நீங்கள் என்றும் என் தெய்வம்! இதை நான்மறந்தாலும் என் உடலில் உள்ள ஒவ்வொரு மயிர்க்கண்ணும் கூடச் சொல்லும். ஆனால் எனக்கு உயிரை, உடலைத் தந்த தந்தையின் சம்மதமின்றி நான் எப்படி உங்களுடன் நெருங்கிப் பழகமுடியும்?"

"என்ன?"

"ஆனால், என்னைப் பெற்றவருடன் போராடி நான் உங்களை அடைவேன்! அல்லது அம்முயற்சியில் இறைவனடியை அடைவேன்." அவள் ஆக்ரோஷமான சபதத்தைக் கூறிய பொழுதிலும் கூட அமைதி குலையாமலும், உரத்துப் பேசாமலும் நடந்துகொண்டாள்.

சிவலிங்கத்துக்கோ ஆத்திரத்தால் உடல் பதறியது, "இன்று என்னுடன் பழகாமற் தடுப்பதற்குக் காரணம்?"

சந்திரா, ஒருகணம் தயங்கினாள். அடுத்த கணம் சிவலிங்கத்திற்குப் பொய்கூற மனமொப்பாத காரணத்தால், "நீங்கள்எங்களை விட அந்தஸ்தில், தராதரத்தில் குறைந்தவராம்."

"என்ன!" ஆத்திரம் சிவலிங்கத்தின் வார்த்தைகளில் கொப்புளித்தது.

ஒருசில நிமிட நேர அமைதியின் பின் அவன் அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

தடதடவென்று மாடிப்படிகளைக் கடந்த அவன் தன் அறையையடைந்து பொருட்களைச் சூட்கேசினுள் அடுக்கினான்.

அவன் என்ன செய்கிறான், காலையில் நடக்கப்போவது என்ன என்பதை அறியாத அந்தப் பேதையோ தன் அறைக்குள் சென்று கவலை மேகங்கள் கலைத்த நித்திரையை எட்டிப் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

— 6 —

அன்றைய காலைப்பொழுது சிவலிங்கத்தின் மனதைப் போலவே ஒளியற்றதாக இருந்தது. ஒரு சில நேரத்தில் ஆதவனின் கிரணங்களால் அழிக்கப்படப் போவதை. அறியாமலே, காலையொளியைப் பனிப்படலம் விழுங்கிக்கொண்டிருந்தது. அந்தக் காலைக் கடுங்குளிரைப் பொருட்படுத்தாது, வாழ்க்கையோடு போராடுவதற்கு வரிசையாகப்போய்க்கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிஅவன்கவிதைகள் பல, கண்ணீரால் எழுதியிருந்தும் கூட, இன்றைய மன நிலையில் தன் துன்பத்தைத் தவிர வேறு எதையுமே கவனிக்க வெறுப்பாக இருந்தது. யன்னல் கதவுகளை அடித்துச்சார்த்திவிட்டு உட்புறமாகத் திரும்பினான்.

அவனுக்குக் கண்கள் எரிச்சல் எடுத்துக் கொண்டிருந்தன. கடந்த இரவு அவனிடமிருந்து பறிக்கப்பட்ட தூக்கமும் நிம்மதியும் அவன் உடலுக்கும் உள்ளத்துக்கும் வேதனையூட்டிக் கொண்டிருந்தன.

தான் அடுக்கித்தயாராய் வைத்திருந்த சூட்கேசைக் கையிலெடுத்துக் கொண்டு நிமிர்ந்தபொழுது நிலைக்கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைநன்றாக ஒரு முறை பார்த்தான். கலைந்திருந்த கேசமும், கசங்கியிருந்த ஆடைகளும், இருளடைந்திருந்த அவனுடைய முகமும் பார்ப்பதற்கு அலங்கோலமாயிருந்தன. அவற்றையெண்ணி ஒரு விரக்தி நிறைந்த சிரிப்பை இழையோட விட்டு விட்டுக் கதவைத் திறந்து கொண்டு மாடிப்படிகளில் இறங்கினான்.

காலைப் பத்திரிகையில் தன் கண்களை ஓடவிட்டுக் கொண்டிருந்தார் புரபஸர் அருணாசலம். அவரின் ஆழ்ந்த அந்த நிலையைச் சிவலிங்கத்தின் சப்பாத்துச் சத்தத்தினால் குழப்பமுடியவில்லை.

"ஐயா!"

புரபஸரின் கண்கள் வியப்பால் விரிவடைந்தன.

"ஐயா! பாடசாலைக்குமுன்னால் ஒரு வீடு காலியாக இருக்கிறதாம். நான் அங்கு செல்லப்போகிறேன்."

"ஏன், இங்கே இருக்கப் பிடிக்கவில்லையா?"

"கரும்புண்ணப் பிடிக்கவில்லை என்று யாராவது சொல்லுவார்களா? ஆனால் நான் இங்கு இருப்பதனால் உங்கள் அந்தஸ்துக் கோட்டைக்கு ஊறுகள் சம்பவிக்கலாம். அதனால் நீங்கள் என்மேல் வைத்திருக்கும் அன்பு வெறுப்பாக மாறலாம். பின்பு ஏற்படும் விபரீதங்களைத் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு."

கடந்த இரவு நடந்ததைச் சிவலிங்கம் எப்படியோ அறிந்துவிட்டான் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். சிவலிங்கத்தை நேரில் பார்த்தபோது தன் செய்கைகளுக்காக வருந்தித்தலை குனியவேண்டும் போலிருந்தது. ஆனாலும் அப்படிச் செய்யாதவராகக் கூறினார், "சிவலிங்கம், என் எண்ணங்களொன்றும் அப்படியான கோணத்தில் நின்று எழுப்பப்படவில்லை. அதை நீ உணர்ந்து கொண்டாயானால்.."

சிவலிங்கம் குறுக்கிட்டான் "ஐயா! உங்கள் எண்ணங்களின் புனிதத் தன்மையைக் குறித்து என்றுமே தாழ்வாக மதிப்பிட்டு என்னை முட்டாளாக்கிக் கொள்ளமாட்டேன். அவை உயர்ந்தவை. அதேவேளையில் உள்ளன்புடன் கூடியவை."

சிவலிங்கம் நன்றிப்பெருக்கால் பேசிய அவ்வார்த்தைகள் புரபஸரைப்பொறுத்தவரையில் ஒவ்வொரு சவுக்கடிகளாக விழுவதாகவே அவருக்குத் தோன்றிற்று. பெருந்தன்மையால் அடிபடும்பொழுது அவருக்கு ஒருபுறம் வேதனையாக இருந்தாலும், அந்த வேதனையைக் கிழித்துப் பார்த்தபோது பெருமையையும் கண்டுகொண்டார்.

அதை உணராத சிவலிங்கம் நன்றி நிறைந்த கண்களுடன் தொடர்ந்தான்: "நான் ஆதரவற்றுத் தவித்த வேளையிலே ஆதரவு தந்து காத்தவர் நீங்கள். அந்த நன்றி என்றென்றும் என் இதயத்தில் அழியாது நிற்கும். வருகிறேன்."

கரங்குவித்து விடைகேட்ட அவனுக்குப் பதில் கூடச் சொல்லமுடியாதபடி அவர் கல்லாய்ச் சமைந்திருந்தார். ஒருசில நேரம் அவர் எண்ணங்கள் கூட செயலற்று நின்றிருந்தன.

"சிவா!" -கண்ணீர்மல்கிய கண்களுடன் ஓடிவந்த சந்திரமதி, அவனுக்கு மிக அருகில் நெருங்கி, அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். தன்னைவிட்டுப் பிரிய வேண்டாமென்றுகோருவது போல் அவள் விழிகள் இறைஞ்சின. அந்த அதிகாலையிலும் நெற்றியில் மின்னிக் கொண்டிருந்த அந்தக் குங்குமம், அவன் அவளின் உடைமை என்பதைச் சிவலிங்கத்தின் மனதில் ஒரு முறை உணர்த்தியது. அவள் செவ்விதழ்கள் சொல்லத்துடித்த கதைகளோ ஒலி வடிவம் பெறாதனவாக மடிந்து மறைந்தன.

சில கணநேரத்துக்குள் சலனமடைந்த இதயத்தில் ஏற்பட்ட வலியையும் தாங்கிக்கொண்டவனாக வீட்டுப் படிகளை விட்டிறங்கித்தோட்டத்தில் கால்வைத்து, வெளிக் கதவுகளைத்தாண்டி நடக்கஆரம்பித்தான். வீட்டு வாசற்கதவுகளில் தன்னுடலைச் சாய்த்தவளாக உள்ளத்தை அவன் பின்னால் விட்டு கட்டுமீறிய ஏக்கத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

புரபஸர் வீட்டை விட்டு வெளியேறி மூன்று நாட்களாயிருந்தன. கடந்து சென்ற மூன்று நாட்களும் மூன்று யுகங்களாகமாறி வேகமிழந்து ஆடியசைந்து அடிமேலடி வைத்து நடந்து சென்றிருந்தன. அந்தநாட்களுள் அவன் வாசம்செய்த இடங்கள் வேதனை, விரக்தி என்பனவற்றின் உச்சப் பகுதிகளாகும். தினமும் பகற்பொழுதெல்லாம் இரவு எப்பொழுது வரும் என்று ஏங்குவதும், இரவில் ஆதவனின் செங்கதிர்களைக் காணத் துடிப்பதுமாக நரக வேதனையனுபவித்துக் கொண்டிருந்தான்.

'நல்லவர்களாக இருக்கும் மனிதர்களிடத்தில் இறைவன் ஒரு சிறு கறையைத்தானும் வைக்காமல் விடுவதில்லை. உலகத்தைச் செழிக்க வைக்கும் மழை கூட ஒரு சில வேளைகளில் உலகத்தையே அழிக்கப் புறப்பட்டுவிடுகிறது. உலகத்தில் எதையுமே பூரணமாக்கும் இடத்தில் இறைவனுக்குமிகவும் கஞ்சத்தனம். இல்லாவிடில் பெருங்குணங்கள், திறமை போன்றவைகளால் ஒளிவிடும் புரபஸரை அந்தஸ்து மோகம் என்னும் போர்வையால் ஏன் மூடி மறைக்கவேண்டும்?' - இப்படியாகச் சிவலிங்கம் இடையிடையே நினைக்துக்கொள்வதுண்டு. அவன் புரபஸரைப்பற்றிய கூடாத எண்ணங்கள் மேல் நடக்க ஆரம்பிக்கும்பொழுது அவன் உள்ளுணர்வு அவனை விழிப்படையச் செய்துவிடும், ஆனால் சந்திரா தன்னுடன் நெருங்கிப் பழகுவதையே தடுத்த புரபஸர் திருமணம் என்றசொல்லை உச்சரிக்கக் கூடமாட்டார் என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானித்துக் கொண்டான்.

தன் அறையைச் சுற்றி ஒரு முறை நோட்டமிட்டான். எந்தவசதியுமேயில்லாத அந்த அறையில் புத்தகங்களும், உடுப்புகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்தன. அந்த அலங்கோலத்தைப் பார்க்க அவனுக்கே அருவருப்பாக இருந்தது. ஒரு நீண்ட பெருமூச்சுடன் கதவுகளைத் திறந்துகொண்டு தெருவை அடைந்தான்.

அந்தமாலை நேரமும் சிறிதளவு குளிருடன் கூடியமென்காற்றும் உடலுக்கு இதமளித்துக் கொண்டிருந்தன. ஆனால் பெரும் வெப்பத்தினால் துடித்துக்கொண்டிருந்த உள்ளமோ இயற்கைத்தாயின் இனிமையைக் கூட நுகர்ந்து கொள்ளச் சக்தியற்றதாகப் புகைந்து கொண்டிருந்தது.

தன்னை மறந்து எதையோ ஆழ்ந்து சிந்தித்தவளாய் வந்துகொண்டிருந்த சாருகேசி, சிவலிங்கத்தைக்கண்டதும் மகிழ்ச்சி தாங்க முடியாதவளானாள். அவர்கள் இருவருக்கும் இடையுள்ள தூரத்தைக் கடக்கப்பொறுமையற்றவளாக ஓட ஆரம்பித்தாள். அவள் உடலைப் போலவே உள்ளமும் மகிழ்ச்சியால் துள்ள ஆரம்பித்தது.

(9-ம் பக்கம் ாார்க்க)

உருவகக் கதை

அடிமை

-"மாவிட்டபுர ஆனர்தன்"-

கட்டப்பட்ட சங்கிலியிலிருந்து விடுதலைபெறும் விருப்பத்தோடு, நாலு பக்கமும் சுற்றிச் சுற்றி ஓடுகின்றது நாய். அதற்குத்தான் சுதந்திர வாழ்வில் எத்துணை வேட்கை! ஆனால்...? அதன் பகீரதப் பிரயத்தனங்கள் யாவும் பயனற்றல்லவோ போய்விட்டன.

"அட சங்கிலியே! உனக்கு ஏன் இந்தக் கொடுமை! என்னைவிட்டுவிடு; உனக்குக் கோடிபுண்ணியமுண்டு!"— நாயின் இந்தத் தளர்ச்சியான மொழிகளைக் கேட்டுக் 'கட கட' வெனச் சிரிக்கிறது, சங்கிலி!

"இனி நீ தப்பமுடியாது. பேசாமல் என்னைத் தாங்கி வைத்துக்கொண்டு நில்! நான்தான் உனக்கு மன்னன். நீ என் அடிமை!"— ஆணவக் குரலெழுப்புகிறது சங்கிலி.

நாய்க்கோ இதயம் கொதிக்கிறது; உடல் குமுறுகிறது! தன்னுடைய பலத்தையெல்லாஞ் சேர்த்துத் தாவியெழுந்து விசையாகப் பாய்கிறது. அந்தோ பரிதாபம்! கழுத்திலே நோவெடுத்ததுதான் மிச்சம்!

இதைக்கண்ட சங்கிலி எக்காளமிட்டுச் சிரிக்கிறது. மேலும் மேலும் பலமாகச் சிரிக்கிறது! நாய்க்கோ உள்ளம் செல்லரிக்கின்றது.

"ஏனடா சிரிக்கிறாய்!"— கோபக்கனல் தெறிக்கக் கத்திக்கொண்டு, சங்கிலியைத் தனது பற்களிடையே வைத்து நெரித்துக்கடிக்கிறது. பாவம்! பல்லிலே ஏற்பட்ட வலி பொறுக்காது சங்கிலியைத் 'தொப்' பென்று கீழேபோட்டு விடுகிறது. "என்ன? பல் எப்படியிருக்கிறது, அடிமையாரே?" சங்கிலி கேலி செய்கிறது.

செய்வதறியாது சுருண்டு படுத்துக்கொள்கிறது நாய். சிறிது நேர இடைவெளி.

மனிதன் ஒருவன் வந்து நாயைச் சங்கிலியிலிருந்து விடுவித்துவிட்டுச் செல்கிறான். நாய் துள்ளிக்குதித்து, ஆனந்த ஆரவாரஞ் செய்கிறது. "நான் போய் வரட்டுமா, சங்கிலியாரே?" - தலையைச் சரித்துச் சங்கிலியை ஒருமுறை ஏளனமாகப் பார்த்து விட்டுக் கேட்கிறது அது!

சங்கிலியோ உள்ளம் வெதும்ப நிலத்திலே கிடக்கிறது. அது பேசவில்லை!

"லைடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரி சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Cotton)
லைடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவல் கத்துமா?

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்''--என்றேன். அப்போதைக்குச் சரி என்று ஒத்துக்கொண்டார்கள்.

படிப்பு முடிந்தது. என் சுட்டித் தங்கையோ தம்பியோ உடனே அண்ணனிடம் சென்று 'கழுதை கத்துமா, கூவுமா?' என்று கேட்டிருக்கிறார்கள். அவர் உடனே 'கத்தும்' என்று சொல்லியிருக்கிறார். எனவே எல்லாருமாகச் சேர்ந்து நான் சொல்லியது பிழை என்றே தீர்மானித்துவிட்டார்கள். அது மாத்திரமா? தங்கை 'செல்வி' வந்து 'அண்ணா, கழுதை சிரிக்குமாம்!' என்றே என்னைக் கேலி செய்யத் தொடங்கி விட்டாள்.

தம்பி 'ராம்' வந்து அண்ணா கூப்பிடுவதாகச் சொன்னான். அண்ணா என்னைப் பார்த்து ''ராஜ்! என்னப்பா உன்னுடைவ செந்தமிழ்? ... கழுதை என்ன செய்யும்?'' என்று கேட்டார்.

''கழுதை பொதி சுமக்கும்'' என்றேன் நான்.

''அதில்லையடா, கழுதை கத்தினால் அதற்கென்ன பெயர்?'' என்றார் சிரித்துக் கொண்டே. (ஆமாம் தன்னுடைய கேள்வியிலேயே கழுதை கத்தும் என்று தீர்க்கமாகக் கூறுகிறார்.)

''கழுதை கூவும்!'' என்றேன் நான்.

''கழுதை கூவுமா? ... ஓ... அப்படியானால் சேவல் என்ன செய்யும்?'' என்றாரே பார்க்கலாம் ..! நான் சிரித்திருக்க வேண்டிய கட்டம். ஆனால் சிரிப்பை அடக்கிக் கொண்டு என் பதிலை இப்படிச் சொன்னேன்.

''அண்ணா! நிச்சயமாகச் சேவல் கத்தும்! ஆனால் கழுதை கூவாது!''

தம்பி தங்கையரே! உங்களுக்குப் புரிந்துவிட்டதல்லவா?

இசையின் தகை

குரல் வளப் பயிற்சி

— வி. என். பி. —

ந்தியாவில் பல இடங்களுக்கும் சென்று சங்கீதத்தை ரசித்த ஓர் ஆங்கிலேயரை 'இந்திய சங்கீதம் எப்படிப்பட்டது' என்று கேட்டபோது, 'இந்துஸ்தானி சங்கீதம் அழுது வழிகிறது; கர்நாடக சங்கீதம் சண்டைபோடுகிறது!' என்று பதிலளித்தாராம்.

இந்துஸ்தானி சங்கீதக்காரர் ஸ்ருதிக்கட்டுப் பாட்டிலும் ரஸஉணர்ச்சியிலும்முக்கிய கவனம் செலுத்துவார்கள். குரல் எது, தம்புரா எது என்று வித்தியாசம் காணமுடியாதபடிக்கு அவர்கள் பாடும்போது ஸ்ருதி ஒன்றிப்போயிருக்கும். ஆனால் தாளக்கணிசம் குறைவாயிருக்கும். ரஸ உணர்ச்சிகளை வெளிக்கொணர்வதில் அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஊக்கத்தின் காரணமாக தாளம் அங்கிங்கு பிசகுவதை பொருட்படுத்த மாட்டார்கள். அவர்களுடைய இசை நெளிவு குழைவுகளும் கார்வைப்பிடிப்பும் நிறைந்திருந்தபடியால்அந்த ஆங்கிலேயரின் செவிகளுக்கு அழுது வழிவது போலத் தோன்றியது.

கர்நாடக சங்கீதம் இசை இலக்கணத்துக்கும் தாளத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. ஆறு காலத்தில் பல்லவி பாடும் வித்வான்கள் தென்னிந்தியாவில் இருந்ததை நினைக்கும் போது கர்நாடக சங்கீதம் தாளத்துக்கு எவ்வளவு பெருமை அளித்திருக்கும் என்பதை ஊகிக்கலாம். தற்காலத்திலும்கூட கர்நாடக இசைக்கலைஞர்கள் சங்கீதத்தின் ரஸப் பொழிவையும் இனிமையையும் இழக்கும் அளவிற்கு தாளத்தில் கூடிய கவனம் செலுத்துவார்கள். சிலர் கற்பனாஸ்வரங்களை ஜாதிபேதம், கதிபேதம்அமைத்துப்பாடும்போது கர்நாடக சங்கீதம் சண்டைபிடிப்பது போலத்தானிருக்கும்.

மேனாட்டு இசைக்கல்லூரிகளில் குரல் வளத்துக்கும் கட்டுப்பாட்டுக்கு மென்று தனியாக சில அப்பியாசங்கள் இருக்கின்றன. நம்மவர்களோ ஜண்டைவரிசைகளை அகார சாதகம்செய்வதோடுநின்றுவிடுகிறார்கள். குரலை வளம்படுத்தும் அப்பியாசங்கள் செய்வதில்லை. இவற்றின்பலனாக ஒருவர் பாடும்போது ஸ்வர கச்சிதம் குறைவதையும், மூச்சு இப்பதையும் திணறுவதையும், மூக்கினால் பாடுவதையும் சாதாரணமாகக்காண்கிறோம். இங்குள்ள சங்கீதக் கல்லூரிகளும் தனிப்பட்ட முறையில் சங்கீதம் கற்றுக்கொடுப்பவர்களும் குரல் வளத்தில் அதிக கவனம் செலுத்துவார்களானால் கர்நாடக சங்கீதத்துககுக்கூடுதலான இனிமையும் மேன்மையும் அளிப்பார்கள்.

இவ்விதமான நீண்டகால அஸ்திவாரப்பயிற்சி அளிப்பதற்கு, இலங்கை சம்பந்தப்பட்டவரையில் ஒரு பெரியதடை இருந்து வருகிறது. இங்கே இசைபயிலும் ஆர்வம் தோன்றியதே சுமார் 25 அல்லது 30 வருடங்களுக்குள்ளாகத்தான், அதற்கு முன்பு இசை பயிலுவது இழிதொழிலெனக் கருதப்பட்டு வந்தது. கல்லூரிகள் இசைபயிற்றத் துவங்கியதும் வானொலியின் வருகையுமே இங்கே இசை ஆர்வம் உண்டாவதற்கு பிரதானமான காரணங்கள். இசையாசிரியர்களாக விரும்பியவர்கள் பட்டம்பெறுவதையேலட்சியமாகவைத்து, புத்தகப்படிப்பினால் தேறும் மற்றும் சோதனைகளைப் போல, இசைப் பரீட்சைகளிலும் தேர்ச்சி பெற்றார்களேயன்றி வாய்ப் பாட்டுக்கு வேண்டிய குரல் வளத்தையோ வாத்தியத்துக்கு வேண்டிய கை வளத்தையோ அபிவிருத்திசெய்ய நினைக்கவில்லை. ஆசிரியர்களாகி கல்லூரிகளில் முடங்கியதும் சிலருக்கு ஏறகனவே இருந்த ஞானம் கூட மங்கிப்போய்விட்டது.

இந்நாட்டுக்கு வானொலி வந்துசேர்ந்ததும் மேடையில் ஏறக்கூச்சப்பட்டோ அல்லது அது இழிவானதென்றோ கருதிய பல பெண்கள் வானொலியில் கச்சேரி செய்ய ஆசைப்பட்டார்கள். நகைநட்டு,காணி பூமி இவற்றைப்போல வானொலியில் பாடுவதும் சீதனத்தில் ஒரு பகுதியாயிற்று! பெற்றோர்கள் மிகச் சுருங்கிய கால எல்லைக்குள் தங்கள் பிள்ளைகள் சங்கீதம் பயின்று உலகத்தார் அறியும்படி வானொலியிலும் பாடவேண்டுமென்றுவிழைந்தார்கள். பத்துப்பதினைந்து கீர்த்தனங்களையும் இரண்டு மூன்று ராகங்களையும் சுத்தமாகப்பாடத்தெரிந்து விட்டால் வானொலியில் இடம் கிடைத்துவிடும். இசை என்பதை கனவிலும் நினைத்திராத பல குடும்பங்களில் இந்த விதமாக இசை புகுந்தது.

இவ்விதம் அரைகுறைப் படிப்பினால் பொதுவாக இசையின் தரம் குறைந்து விட்டது. சங்கீத ஆசிரியராகி விட்டாலோ வானொலியில் பாடிவிட்டாலோ இசைக்கலைஞர்களாகி விட்டோம் என்று நினைப்பது மடமை. இசை என்பது பரந்த சமுத்திரம் போல் விரிந்துகிடக்கிறது. அதன் கரையையோ ஆழத்தையோ கண்டவர் இல்லை. பத்துவருட குரு சிட்சை, பத்துவருட சொந்த சாதகம், பத்துவருட கேள்வி ஞானம்- இதற்குப்பிறகே மேடையேறிக் கச்சேரி செய்யவேண்டுமென்று முன்னோர் கூறுவார்கள்.

ஆசிரியர்களோ வானொலி கலைஞர்களோ எல்லோருமே இப்படியென்று கூறுவது அநீதி. இசைப் பயிற்சியில் உண்மையான ஆர்வம் கொண்டு அதை நாளிலும் பொழுதிலும் அப்பியாசம் செய்து அதே தியானமாக இருப்பவர்களும் உண்டு. அவர்களில் ஒருவர்இசைக்கு செய்யும் தொண்டு மற்ற நூறுபேர் செய்வதற்கு சமானமானது. மேனாட்டு இசைப் பள்ளிக் கூடங்களில் எவ்விதம் குரல்வளப்பயிற்சி நடத்துகிறார்கள் என்பதை நம்மவர்கள் அறிந்துகொள்வது நல்லது.

(தொடரும்)

குடிதண்ணீராக மாறும் உப்புக்கடல்

சூரியவெப்பத்தினால் கடல் நீரானது கொதித்து நீராவியாக மேலெழுந்து மழை முகிலாக கருக்கொண்டு ஆகாயத்திலிருந்து மழை பெய்வது நமக்குத் தெரிந்ததே.

கடலிலிருந்து குடிதண்ணீர் எடுக்கும் ஒரு புதிய செயற்கை முறையினால் வடகரோலினாலில் ரைட்ஸ்வில் கடற்கரையில் நாள்தோறும் 15,000 கலன் நல்ல தண்ணீர் உற்பத்தி செய்துவருகிறார்கள். கடல்தண்ணீரை உறையவைத்து, உப்பு இல்லாத பனிக்கட்டிப் படிகங்களாக மாற்றுகிறார்கள். உப்பையும், பனிக்கட்டிப்படிகங்களையும் தனித்தனியாகப் பிரித்துப் பின்பு, பனிக்கட்டியை உருக்கி, சுத்தமான குடிதண்ணீர் தயாரிக்கிறார்கள். இவ்வாறு பனிக்கட்டிப் படிகங்களை உண்டாக்கும் இந்த முறையைச் சாதாரண உணவுப்பண்டங்களைக் கெட்டிப்படுத்துவதிலும் பயன்படுத்த முடியும். இங்கு நல்ல தண்ணீர் உற்பத்தி செய்வது நோக்கமல்ல. உணவிலிருந்து தண்ணீரைப் பிரித்து எடுப்பதே நோக்கம். தண்ணீர் கலந்த எந்த திரவப்பொருளைக் கெட்டியாக்குவதற்கும் இந்த முறை பயன்படும்.

நியூயோர்க்கில் நடைபெற்றதொரு கண்காட்சியில் சுத்தமான தண்ணீர் காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. இங்கு தானே இயங்கும் இயந்திரம் ஒன்று வடிகட்டிய தண்ணீரை உற்பத்தி செய்து கொண்டிருந்தது. வடிகட்டிய தண்ணீரில் எவ்வகை அசுத்தமும் அறவே கிடையாது. ஆய்வுக் கூட வேலைகளுக்கு அது முக்கியத் தேவை. இந்த இயந்திரம் வடிகட்டியதண்ணீரை உற்பத்தி செய்து, தேக்கி வைத்து, தேவையான வேகத்தில் வழங்குகிறது.

அரசின் உதவி நாடாதவர்கள்

பாட்னா,(தபால்)

எல்லாவற்றிற்கும் மக்கள் அரசாங்க உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதை முன்னாள் இந்தியப்படைத் தளபதி கே. எம். காரியப்பா இங்கு கண்டித்தார். ''ஒரே ஒருதுறையில் மட்டும் மக்கள் அரசாங்கத்தின் உதவியின்றி தங்கள்சொந்த விருப்பப்படியே நடந்துகொள்கின்றனர். குழந்தைகள் பெறுவது தான் அந்தத் துறை!'' என்றார்.

சமையற்காரர் தேவை

அனுபவம்மிக்க திறமையான சமையற்காரர் ஒருவர் தேவை. தகுதிப் பத்திரங்களுடன் கடிதமூலமோ நேரிலோ தொடர்பு கொள்க. மகாஜனக் கல்லூரி விடுதிச்சாலை, தெல்லிப்பழை. 179

வரி விளம்பரம்

தேவை

வீடுகளுக்குச்சென்று விற்பனை செய்ய பெண்விற்பனையாளர் தேவை .சம்பளம் 10-00 விபரங்களுக்கு T. வினாயகம் இன்டஸ்றீஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 285

தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வானில் சென்று மனோகரா தேயிலை விற்பனை செய்வதற்கு தகுந்த அநுபவம் வாய்ந்தவர் தேவை. பிணைப்பணம் ரூபா 1000. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். மனோகரா தேயிலை நிலையம், வல்வெட்டித்துறை. 286

விற்பனைக்கு

36, 20 பரப்புக் கொண்ட இரண்டு வயல்கள் மறுவன் புலவு நாவற்குழி பகுதியில் விற்பனைக் குண்டு. விபரங்கட்கு க. அருளானந்தம், 8, றஞ்சன் றோட் (ஸ்ரேஷன்றோட்),வெள்ளவத்தை. தொலைபேசி: 82800. 289

காணி விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கேற்ற மிகவும் விசாலமான 2பரப்புக்கு மேல் உள்ள காணி, யாழ்ப்பாணத்தில் 18 23, மணல்தரை லேன், திருநெல் வலி தெற்கில் உண்டு. விபரங்களுக்கு: 36, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 290

விற்பனைக்கு

பெலமான புது கோழிக் கூடுகள் விற்பனைக்கு இருக்கின்றன. 6 அடி × 4 அடி. வாடிவீடு, கீரிமலை. 291

நொய்வு, கசம், நீர்மிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வானத்தாமரை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலையில் சாருகேசியைக் கண்டது சிவலிங்கத்திற்குக் கூடப் பெரிய ஆறுதலாக இருந்தது. தனிமையில் இருந்து வெந்து வெடித்துக்கொண்டிருந்தவனுக்கு சாருகேசி ஒரு குளிர்ந்த மென்காற்றாய்க் காட்சியளித்தாள்.

(தொடரும்)

இடியாழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரேலியா)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

பச்சை விளக்கு

REGAL - JAFFNA
NOW SHOWING
Audie Murphy
in
SHOWDOWN
(Thrilling Action Film)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் ராசிபலன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நன்று. இதரநாட்களில் மன அமைதிவேண்டும்.

விருச்சிக ராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முயற்சிகளில் வெற்றி, சமூகத்தில் மதிப்புயர்ச்சி, பொருள்வரவு, சந்தோஷநிலைமை, தேகசுகமும் குடும்பத்தில் நிம்மதியும், எதிரிகள் பணிவு, வியாகாதி போன்ற சுபகருமங்களில் தொடர்பு, பொதுவாக செல்வநிலைமை காணப்படும். கல்வித்துறையினருக்கும் உத்தியோகத்துறையினருக்கும் தடைகள் குறுக்கிட இடமுண்டாகையால் கவனமாக நடப்பது நன்று. கமத்தொழில் மத்திமபலன் தரும். வர்த்தகம் நற்பலன்-திப்பலன் கலப்பாக இருக்கும். பெண்களுக்கு கஷ்ட பலன்கள் உள. ஆண்கள் தொடர்பு, கேளிக்கைகளில் கலப்பு வேண்டாம். பிரயாணங்கள் உள. பொதுவாக மே 29-ந் தேதி விசேடமாகும். இதர நாட்களில் அமைதி நலம்.

தனுசு ராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மத்திம பலன்கள் நடக்க இடமுண்டு. தொழில்களில் ஓரளவு வெற்றி. நண்பர் சேர்க்கையால் நலன்கள் கிட்டல், செல்வாக்கு அதிகரித்தல், எதிரிகள் குறைதல், தேகாரோக்கியம், குடும்பசுகம், பணநிலைமையில் கஷ்டமின்மை ஆதியன காணப்படினும் குடும்பத்திற்கு வெளியில் இனபந்துக்களுடன் சச்சரவைத்தவிர்த்தும் பெரியமுயற்சிகளில்ஈடுபடாமலும் இருக்கவும். கல்வித்துறை சமமானபலன்தரும். கமத்தொழில் முயற்சி அதிகம் பலனைத் தராது. உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மாற்றமேதும் இருக்காது. வர்த்தகத்துறை அபிவிருத்திக்கு இடமில்லை. பெண்களுக்கு அமைதி நலந்தரும். தேகாரோக்கியத்தைப் பேணி, காதல் விவகாரங்களில் ஈடுபடாது பெண்கள் இருப்பது அவசியமாகும். மே 24-ல் சச்சரவுகளைத் தவிர்த்து இதர நாட்களில் அமைதியாக இருக்க.

மகர ராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்டபலன்கள் மிகவும் அதிகமாக உள. சுபமான பலன்களை எடுத்துக் கூறுவது கஷ்டமாயினும் நல்ல நண்பர் சேர்க்கை, குழந்தைப்பேறு போன்ற கொண்டாட்டங்கள் நடத்தல், முயற்சிகளுக்கு பிறர் ஊக்கமளித்தல் போன்றவை காணப்படும். ஆயினும் தேகசுகம் பாதிக்கப்படல், நட்டமேற்படல், அளவுக்கதிகமான செலவுகள், எதிரிகளாலும் இனபந்துக்களாலும் கஷ்டங்கள் ஏற்படல், கமத்தொழில், வர்த்தகம் முதலியவை பாதிக்கப்படல், காயங்கள் ஏற்படல், உத்தியோகத்தில் அபிவிருத்திகாணல், பெண்களுக்கு சிறப்பானபலன்கள் நடத்தல் ஆதியன உண்டாம். மே மாதம் 27, 28 பொதுவாக சுபதினங்களாகும். இதர நாட்களில் பொறுமையும் அமையும் வேண்டும்.

கும்பராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மத்திமமான பலன்களையே எதிர்பார்க்கலாம். எதிரிகள் வீழ்ச்சி, தொழிலில் ஆதாயம், தேகநலம், மதிப்பு சுவிகரிப்பு, நல்லநண்பர் சேர்க்கையாதியன இருக்கும் நேரத்தில் முயற்சிகளுக்கு எதிர்பாராத தடைகள், துக்கமனுட்டித்தல், அளவுமீறிய செலவுகள் ஏற்படல், வீண் அபவாதம் கேட்டல், அபாண்டமான குற்றச்சாட்டுகள் ஆதியனவும் உண்டாம். பொதுவாக அமைதிநலம். உத்தியோகத்தினருக்கு மேலதிகாரிகள் தொல்லைகளுண்டு. கமத்தொழில் - கல்வித்துறை-வர்த்தகத்துறை மத்திமமாகும். வர்த்தகத்துறையில் புதியனவேண்டாம். பெண்களுக்கு உடல்நலக்குறைவு, மதிப்புக்குறைவு, பணமுடை காணப்படும். மே 26, 28 நலமான நாட்கள்.

மீனராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் நண்பர் சேர்க்கை, எதிரிகள் வீழ்ச்சி, சுகபோக வசதிகள் கிடைத்தல், தொழிலில் மேன்மை, வருவாய் உயர்ச்சி, தேகநலம் ஆதியன உண்டாம். இடையிடை அபிப்பிராயபேதம் காரணமாக சண்டை சச்சரவுஏற்படல், குடும்பத்தில் அமைதியின்மை, கமத்தொழில் பாதித்தல், வர்த்தகம் சிறத்தல், கல்வித்துறையினருக்கு சிறப்புக்கிட்டுதல், உத்தியோகத்துறையினருக்கு தொழிலிடக்கஷ்டங்கள் ஏற்படல், பெண்களுக்கு நல்ல நண்பர் சேர்க்கை, குடும்பசந்தோஷம், தேகநலம் குன்றுதல், பணமுடை காணப்படும். பொதுவாக மே 26, 28 நலமான நாட்கள். இதர நாட்களில் சண்டைசச்சரவைத் தவிர்த்து நடக்குக.

கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு காணியும் கடன் வசதியும் உண்டு. விபரங்களுக்கு சிலோன் றிசேவ் லிமிட். யாழ்ப்பாணம்.
299

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 23-கதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இரு மணித்தியாலங்களுக்குள் 12 பஸ்கள் பழுதடைகின்றன

யாழ்ப்பாணத்தில் மக்கள் சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில்போக்குவரத்துச் சேவைக்காக அனுப்பப்பட்டுள்ள இ. போ. ச. பஸ் வண்டிகள் அடிக்கடி பழுதுபடுகின்றன என அறியப்படுகிறது. பொதுவாக வடமாகாண சேவையும், குறிப்பாகத் தீவுப்குதிச் சேவையும் இலங்கையின் பிறபாகங்களையும்விட மிகக்குறைந்த நிலையில் உள்ளதாக அறியப்படுகிறது. இதுபற்றி யாழ்ப்பாணபஸ் நிலைய டிப்போ மனேஜர் தெரிவித்ததாவது:

பிற்பகல் மூன்றரை மணிக்கும் ஐந்து மணிக்கும் இடையில் சராசரி பன்னிரண்டு பஸ்கள் பழுதடைகின்றன. தினமும் இவ்வாறு நிலைமையிருப்பதால் உரியநேரத்துக்கு பஸ்களை அனுப்ப எம்மால் முடிவதில்லை.

மந்திரிக்கு வரவேற்பு

சாவகச்சேரி, ஞாயிறு

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கும், சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினத்திற்கும் சாவகச்சேரி கிராமசபையின் ஆதரவில் அடுத்த மாத நடுப்பகுதியில் உத்தியோகபூர்வமாக ஒரு வரவேற்பு அளிக்கப்படும் என்றும் இந்தவரவேற்பில் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள எல்லா ஸ்தலஸ்தாபன சபைகளினதும் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என்றும் அறியப்படுகிறது.

கம்பராமாயண . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"கம்பன் தமிழ்" எனும் பொருள்பற்றி உரைநிகழ்த்துகையில் கூறினர்.

பிரஸ்தாப கூட்டத்துக்கு, கல்லூரி அதிபர் திரு. வி. எஸ். விஸ்வலிங்கம் தலைமை வகித்து, மேற்படி கலை மன்றத்தின் நோக்கம், செயல், சேவை பற்றியும், தமிழின் பெருமை பற்றியும். கம்பன் தொண்டு பற்றியும் பேசினார்.

பண்டிதர் இளமுருகனார் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கலைகள் இருவகைப்படும். ஒன்று அறிவுக்கலை, மற்றது அழகுக்கலை. இவற்றுள், அழகுக்கலையே மனிதனுடன் உடன்பிறந்த கலையாகும். இக்கலையே மனிதனை மனிதனாக வாழச் செய்கிறது. அறிவுக்கலை அவனுக்கு அவனது அன்றாட வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்குமேயொழிய, வாழ்வின் உயிர்ப் பொருளை, உள்ளத்துடிப்பை எடுத்துக் கொடுக்கக்கூடியதன்று. அழகுக்கலை மூலமே புலவன் தனது கனவுலகத்தினின்று நனவுலகஉண்மை நிலையைக் காணுகின்றான். அவன் உள்ளதை உள்ளபடி கூறுவதில்லை என்பது உண்மையே. அவ்விதம் அவனால் கூறவும் முடியாது. அப்படிக் கூறமுடிந்தால், அதில் அழகிருக்காது - கற்பனை இருக்காது-நயமிருக்காது - இன்பமிருக்காது. வாழ்வை இரசிக்க, வாழ்வின் உள்ளுணர்வை உணரவே அழகுக்கலை உள்ளது எனின் மிகையாகாது."

கூட்டத்தில், கல்லூரித் தமிழ் பேராசிரியர்பண்டிதர் க. இராசையாவும்பேசினார்.

கூட்டத்துக்கு நல்லூர் ஆசிரிய கல்லூரி ஆசிரியமாணவரும், வேறு பலபாட சாலை ஆசிரியர்களும் சமூகமளித்திருந்தனர். மன்றச் செயலாளர் திரு. வை. நாகராசன் நன்றியுரை கூறினார்.

கலைமாநாடு நடத்த முடிவு

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவு தெற்கு சன சமூக நிலையச் சார்பில் வருகிற மாதமுடிவில் ஒரு கலை விழா நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலக்கிய மன்றத்தாரும், அனலைதீவு மத்திய சனசமூக நிலையத்தாரும் இசைவிழாவில் இரட்டு நாட்களில் இயல், இசை, விழாவை நடாத்த உத்தேசித்துள்ளனர்.

வேலையற்றோருக்கு மந்திரியின் வரவேற்பு

பம்பலப்பிட்டி, சனி

வேலையற்றிருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் தமது பெயர்களை தொழிற்கந்தோர்களில் பதிவுசெய்து கொள்ளவேண்டுமென தொழில்மந்திரி ஜனப் எம். எச். முகமது தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் துறையிலும், தனியார்துறையிலும் உள்ள காலி ஸ்தானங்களுக்கு இனிமேல் தொழிற்கந்தோர்மூலமாகத்தான் ஆட்கள் தெரிவு செய்யப்படுவார்களென்றும் சகலரும் நியாயமான முறையில் வேலை பெறக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துமுகமாகவே தாம் இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் மந்திரி அறிவித்தார்.

தமிழரசாருக்கு வரவேற்பு

மன்னார், சனி

மன்னார் தொகுதி வாழ் தமிழ்பேசும்மக்கள் சார்பில் எதிர்வரும் 29-ம் திகதி மன்னார் தொகுதி எம். பி. திரு. வி. அ. அழகக்கோனுக்கும், தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் மற்றும் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேல்சபை உறுப்பினர்களுக்கும், உள்ளூர் ஆட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்துக்கும் ஒரு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

வரவேற்பு வைபவமும், பகிரங்கக்கூட்டமும்மன்னர் முற்றவெளியில் நடைபெறவிருக்கிறது.

கரப்பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

காரைநகர், ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும் தோப்புக்காடு கி. மு. சங்க கரபந்தாட்டக் கோஷ்டிக்கு மிடையே நடைபெற்ற சிநேகபூர்வமானகரபந்தாட்டப்போட்டியில் தோப்புக்காடு கி. மு சங்க கரபந்தாட்டக்கோஷ்டி இருபுள்ளி களைப்பெற்று வெற்றிபெற்றது.

[illegible]

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாகும். நாம் எமதுபொருள் வளத்தை எப்படிப்பெருக்க வேண்டும் என்பதை நன்கு தீர்மானிக்கவேண்டும். எமது தாய் தந்தையர் மலாயா நாடு, தென் இலங்கைபோன்ற இடங்களுக்குப்போய் பொருள்களைக் கொண்டுவந்தனர். இன்றுகாலம் மாறிவிட்டது. எல்லாவற்றுக்கும் எமது கை உழைப்பையே காத்திருக்க வேண்டியுள்ளது. எமது பகுதிகளிலுள்ள கடல், நிலம், பொருள் போன்றவற்றை தேவைக்கு ஏற்றது போல் நன்கு பயன்படுத்தப்படவேண்டும். எமது இளம் சமுதாயத்தினர் கைத்தொழில், கமத்தொழில், கடல்தொழில் போன்றவற்றில் அதிகம் ஈடுபடவேண்டும். கௌரவமாக எல்லாவேலைகளையும் செய்வதற்கு முன்வரவேண்டும். சாதி, மத வேறுபாடு இன்றி நாம் எமது சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும். இன்று உள்ளூராட்சி மன்றங்களின் உன்னதவேலைகள் எல்லாம் பொதுமக்கள் கையில் தான்தங்கியுள்ளன. பொதுமக்கள் வரியைக்கூட்டிக்கொடுப்பதன் மூலம் அநேக காரியங்களைச்செய்யலாம். இன்று மின்சாரம், குடிதண்ணீர் விநியோகம் போன்ற அத்தியாவசியத் தேவைகளைநாம் உடன் பூர்த்தியாக்க வேண்டும். அதற்கு ஒவ்வோர் ஊர்மன்றங்களும் அதிகம் உழைக்க வேண்டும்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் ஒருகட்டுக்கோப்புடன் இயங்கவேண்டும். கட்டுக்கோப்பை விட்டு நமக்குள் பகமை வளர்ப்பதற்கும் குரோதம் பேசுவதற்கும்இதுநேரமல்லவென்றார்.

வலிமேற்கு காரியாதி[illegible] திரு. டி. டபிள்யூ. செல்வரத்தினம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர், யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. கே. ஏ. செல்லையா, டாக்டர் க. குமாரசாமி, திரு. க. வயிரவநாதர் திரு. த. சிவபாதசுந்தரம் ஆகியோர் [illegible] பலர் பேசினர்.

37 வருட சேவைக்குப்பின் ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காரைநகர் இந்துக்கல்லூரி அதிபராக 37 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய திரு. சி. கந்தையா அடுத்தமாதம் முதல் திகதியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

சமய, இலக்கியத் தொண்டுகளில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ள இவரது சேவையைப் பாராட்டுமுகமாக மேற்படி கல்லூரியில் சேவை நலம் பாராட்டு வைபவமும் பிரிவுபசார விருந்தும் நடைபெறவிருக்கிறது.

[illegible]

முல்லைத்தீவு, சனி

சூரிவெளியிலுல் பாதிக்கப்பட்ட இப் பகுதிமக்கள் அனேகருக்கு இதுவரை ஒன்றும் வழங்கப் படவில்லை. இவர்களுடைய சேதங்கள் மதிப்பிடப்பட்டும் இதுவரை பணம் வழங்காததையிட்டு வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரத்துக்கு முறையிட்டுள்ளனர்.

'ஒளி காட்டியவர் விவேகானந்தர்'

வெள்ளவத்தை, சனி

'இருட்டறையில் இருந்த இந்தியாவை ஒளி காட்டி வழிகாட்டியபெருமை விவேகானந்தருக்கே உரியது' என கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கொழும்பு விவேகானந்த சபையாரால் சபை மண்டபத்தில் கொண்டாடப்பட்ட விவேகானந்தர் விழாவில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு. இரா. சபநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் விவேகானந்தருடைய போதனைகள் ஆன்மீக விடுதலைக்கு அடிகோலும் இயல்புடையன என்று கூறி இந்தியப்பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அமெரிக்க மக்களுக்கு தெளிவாக எடுத்துக்கூறிவர் விவேகானந்தர் எனத்தெரிவித்தார்.

திரு. வில்மன் பேசுகையில், மேற்கு நாகரிகத்தைக் கண்மூடித்தனமாகப்பின்பற்றக்கூடாது என்றும் கீழைத்தேய நாகரிகத்துக்கும் சமயப் போதனைகளுக்கும் இந்தியாவைப் பின்பற்றவேண்டும் என்றும் கூறினார்.

விவேகானந்த சபைக்கு ஆயிரம் ரூபா நன்கொடையளித்த அன்பர் ஒருவருக்கு தலைவர் பாராட்டுத் தெரிவித்தார்.

குடிநீர் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காரைநகர். தோப்புக்காடு கிராமம் குடிநீர்க் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளது. அங்குள்ள குளம், கிணறு. மற்றும் யாவும் கடும் வரட்சியால் வற்றிவிட்டன. பெண்கள் சுமார் ஒரு மைலுக்கு மேலான தூரத்திற்குத்தண்ணீர் கொண்டுவரப்போகும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

'உலகில் சிறந்த மொழி தமிழ்'

[illegible]

அய்யம்பேட்டை, மே 22

உலகில் சிறந்தமொழி தமிழ்மொழி என்றும் கூடிய விரைவில் தமிழகத்தின் ஆட்சி மொழியாக தமிழ் ஆகும் என்றும் காங்கிரஸ் தலைவர் காமராஜர் கருத்து தெரிவித்துள்ளார்.

கல்லணையில் உள்ள காங்கிரஸ் பயிற்சி முகாம் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. காமராஜர் மேற்கண்டவாறு கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org